விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber ; 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 130 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 15 வெள்ளிக்கிழமை (28.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## வவுனியா வெடுக்குநாறி மலை

# ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்களை மீண்டும் அதேயிடத்தில் வையுங்கள்

## வவுனியா நீதிமன்றம் உத்தரவு



(வவுனியா)

வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்களை மீண்டும் அதேயிடத்தில் வைக்க வவுனியா நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை பொலிஸார் எடுத்துச் சென்றுள்ள விக்கிரகங்களையும் ஆலய பரிபாலன சபையிடம் உடனடியாக ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் முன்னாள் தளபதி அமெரிக்கா நுழையத் தடை

### மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட மற்றும் அவரது மனைவி ஆகியோர் அமெரிக்காவிற்குள் பிரவேசிப்பதற்கு தகுதியற்றவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

வசந்த கரன்னாகொட கடற்படைத் தளபதியாக செயற் ▶15

## நெடுந்தீவில் தாக்குதலுக்குள்ளான 100 வயது மூதாட்டியும் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 100 வயது மூதாட்டி நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்த தகவலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகம் உறுதி செய்தது.

100 வயது மூதாட்டியான பூரணம் நேற்று ▶15

## மல்லாகத்தில் 19 பவுண் திருட்டு ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தில் பட்டப்பகலில் வீடுடைத்து 19 தங்கப் பவுண் நகைகளை திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து திருடப்பட்ட ▶15

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை சபையில் சமர்ப்பிக்க வேண்டாம்

### மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை, அதன் தற்போதைய வடிவில் பாராளுமன்றில் முன்வைக்க வேண்டாம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஒரு தேசிய கலந்துரையாடல் முடிவடைந்து, தெளிவான திட்டத்துடன் அதன் பரிந்துரைகள் வெளியிடப்படும் வரை காத்திருக்குமாறும் ஆணைக்குழு கோரியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டமூலம் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு, ▶15

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான

மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பரீட்சை வினாத்தாள்

உள்ளே

## காங்கேசன்துறை தையிட்டியில் புதிதாக அமைக்கப்பட்ட விகாரைக்கு

### நேற்று இரகசியமாக கலசம் வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை, தையிட்டிப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விகாரை ஒன்றிற்கு கலசம் வைக்கும் நிகழ்வுகள் மிக இரகசியமாக நேற்று இடம் ▶15

## இலங்கை வருகிறார் இந்தியத் தளபதி

(கொழும்பு)

விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவின் அழைப்பிற்கமைய இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீப் மார் ▶15

## நீதிமன்ற கட்டளையை மீறி குருந்தூரில் பௌத்த விகாரை

### நேரில் விஜயம் செய்யவுள்ள நீதவான்

(முல்லைத்தீவு)

நீதிமன்ற கட்டளையை மீறி குருந்தூர்மலையில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் குருந்தூருக்கு நேரில் விஜயம் செய்ய நீதவான் திகதியிட்டு கட்டளை வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையைமீறி பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர் மலை ஆதி சிவன் ஐயனார் ▶15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் மோதி மாணவி பலி



நண்பரின் பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்ளச் சென்ற 16 வயதுடைய பாடசாலை மாணவியொருவர் புகையிரதத்தில் மோதி உயிரிழந்துள்ளதாக மாத்தறை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை அலவெல்லநுபே பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. ஹித்தெட்டிய கிழக்கைச் சேர்ந்த தேவ்மினி சந்தருவாணி (16) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் அவர் ஹித்தெட்டிய தர்மராஜா வித்தியாலயத்தில் 11 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.(ம-7,9)

# ஜனாதிபதியிடம் மத்திய வங்கி ஆண்டறிக்கை

இலங்கை மத்திய வங்கியின் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நிதி அமைச்சில் வைத்து கையளிக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் 73 ஆவது வருடாந்த அறிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ள இது 4 பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது.

அதன்படி, ஆண்டின் பொருளாதார விவகாரங்களின் நிலையை விளக்குகின்ற 8 அத்தியாயங்களையும், 30 புள்ளிவிபர அத்தியாயங்களையும் முதல்பகுதியில் உள்ளடங்குகின்றது. (ம-7,9)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் நடேசன் கிருபாகரன் அவர்களின் அன்புத் தந்தை

### பொன்னையா நடேசன்



அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.** (C-6443)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி சுமந்திரா துஸ்யந்தன் அவர்களின் அன்புத் தந்தை

### சபாரட்ணம் சுப்பிரமணியம்




அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.** (C-6442)

## மரண அறிவித்தல்

### துரைசிங்கம் ஜெயமோகன்

**(சிங்கம் சவுண்ஸ் உரிமையாளர்)**



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட துரைசிங்கம் ஜெயமோகன் (தாடி மாமா) அவர்கள் 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழாலை கிழக்கு ஏழாலை எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (28.04.2023) வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


ஏழாலை கிழக்கு,
ஏழாலை. (15385)

தகவல்: குடும்பத்தினர்
077 123 3762
077 945 4688

## 2வது வருட நினைவுநாள்

**28.04.2023**

### அமரர் சுந்தரலிங்கம் இராஜகுமார்



ஈராண்டு கடந்தாலும் உங்கள்
நினைவுகள் என்றும் அகலாது
ஸ்வரங்கள் ஒலித்துக் கொண்டிருந்த
தங்கள் இன்னிசையைக் கேட்டு
ஈராண்டாகியது தெய்வமாக எங்களோடு
என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் நினைவுகளோடு வாழும்

**மனைவி, பிள்ளைகள்** (15381)
**கே.கே.எஸ்.வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.**

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

1. கந்தையா தங்கேஸ்வரி (முன்னர் தங்கேஸ்வரி இராமநாதன்)
2. கந்தையா சந்திரசேகரமுதலி இருவரும் 61, Amperjack Blvd, Scarborough, Ontario M1H 2J4, Canada.

தமது அற்றோனித் தத்துவக்காரர் காசித்தம்பி இராமநாதன் ஆவரங்கால், புத்தூர், யாழ்ப்பாணம் மூலம் தோற்றம்

-மனுதாரர்கள்

வழ. இல: ந.சொ/43/2022

எதிர்

Consortium of Varany Organisations (வரணி ஒன்றியங்களின் அமையம் 'COVO')

எனும் நம்பிக்கைப் பொறுப்பு பருத்தித்துறை வீதி, கரம்பரைக்குறிச்சி, வரணி, யாழ்ப்பாணம்

-எதிர் மனுதாரர்

மேற்படி இலக்க வழக்கின் மனுதாரர்களினால் வரணி வீரகத்திப் பிள்ளையார் கோவிலுக்கு சொந்தமான இதன் பின்னால் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தினை Consortium of Varany Organisations (வரணி ஒன்றியங்களின் அமையம்-'COVO') எனும் நம்பிக்கைப் பொறுப்புக்கு 99 வருட குத்தகைக்கு வழங்குவதற்காக கௌரவ மன்றின் அனுமதியைக் கோரி இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கோரப்பட்ட நிவாரணம் தொடர்பில் குறித்த விடயத்தில் அக்கறையுள்ள நபர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ் வழக்கானது எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் நாளன்று இம் மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், தென்மராட்சிப் பகுதி, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு, கொடிகாமம் பிரதேச சபை, கரம்பைக்குறிச்சி கிராமசேவகர் பிரிவு (J/342) வரணிக்கோயிற்பற்று. வரணி கரம்பைக்குறிச்சி இறை மராட்டியும் மறுபிரிவுகளும் இதற்கூடாக போகும் வீதி புறநீங்கலாக ஆட்சிப்படி நில.பர 45. இதற்கு எல்லைகள் கிழக்கு:கந்தையா சந்திரசேகர முதலிக்கும் குமாரசாமி மனோரஞ்சனுக்குமுரிய ஆதனங்கள் வடக்கு: ஸ்ரீஸ்கந்தராசா பெண் மாணிக்கத்திற்குரிய ஆநனம் மேற்கு: ஒழுங்கை தெற்கு: காவற்காடு ஊரெல்லை தெரு இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் மற்றும் யாவும்

மன்றின் கட்டளைப்படி

திகதி :17.04.2023 (15391)

நீதிவான்,
மாவட்ட நீதிமன்றம்
சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்



மண்ணில் 11 - 03 - 1954

விண்ணில் 21 - 04 - 2023

### வேலுப்பிள்ளை தெய்வேந்திரன்

துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியின் தலைநகர் பேர்லினை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தெய்வேந்திரன் அவர்கள் கடந்த 21.04.2023 (வெள்ளிக்கிழமை) அன்று ஜேர்மனியில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (கூட்டுறவு தலைமைக் காரியாலய பரிசோதகர்) - குலரத்தினம் (குலக்கா) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குலேந்திரன் (கல்வித் திணைக்களம்), குலநாயகம் (ஓய்வுநிலைச் செயலாளர் - பிரதேச சபை, கரவெட்டி), பாலேந்திரன் (லண்டன்) காலஞ்சென்ற இந்திராணி, காலஞ்சென்ற நாகேந்திரன் மற்றும் கௌரி (Eswaran Brothers Ceylon (Pvt) LTD கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயகுமாரி (ஓய்வுநிலை கல்வித்திணைக்களம்), இந்திராணி (ஓய்வுநிலை ஆசிரியை - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), சாந்தா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஜனகன் (அவுஸ்ரேலியா), ரேகா (அவுஸ்ரேலியா), ரஜிலதா (கொழும்பு), அபிதாரணி ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் சஜீவன் (கொழும்பு) அவர்களின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 02.05.2023 (செவ்வாய்க்கிழமை) ஜேர்மனியில் Friedhof Ruhieben, Am hain, 13597 இல் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குலநாயகம் - 077 631 6932
பாலேந்திரன் - 00447956213219 (C-6440)

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்

## அடிப்படை உரிமைகளை மீறுகின்றது

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

**உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் சில சரத்துகள் அடிப்படை உரிமையை மீறும் வகையில் அமைந்துள்ளதாக, அதனை ஆய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு, அவதானித்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை மறு ஆய்வு செய்ய சிரேஷ்ட சட்ட வல்லுநர்கள் அடங்கிய குழுவை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அமைத்தது.

இந்தக்குழுவின் அவதானிப் பின்படி, உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் 85 மற்றும் 86 ஆம் பிரிவின் குற்றவியல் அம்சங்கள், நீதி அமைப்பின் கொள்கைகளை மீறுவதாக அமைந்துள்ளது என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது, குடிமக்களின் சட்ட உரிமைகளுக்கு முரணானவையாக கருதப்படுகின்றது.

குறித்த சரத்துகள் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் பயணங்களை மேற்கொள்வதற்கான சுதந்திரம் உள்ளிட்ட உரிமைகளை மீறும் வகையில் அமைந்துள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், இலங்கையின் அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

எனவே சட்டத்திற்கு இணங்க, திருத்தங்களைச் செய்யுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், நீதி அமைச்சு உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் கோரியுள்ளது.

திருத்தமின்றி சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டால் அதனை ஆட்சேபனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது. (நி)

# மேலும் ஏழு பேருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் புதன்கிழமை 7 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின் அறிக்கைப்படி, இதுவரை 6,72,143 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# மே 20 இற்குப் பின்னர் வெப்பநிலை குறையும்

### வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதிக்கு பின்னர், வெப்பமான காலநிலை குறைவடையக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டில் தற்போது மழை கிடைக்கப்பெறும் நிலையில், வெப்பம் குறைவடைவதற்கான சாத்தியங்கள் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாநாயக்க கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தெரிவித்துள்ளார்.


ஆரம்பத்தில் காணப்பட்ட வெப்பநிலை தற்போது சிறியளவில் குறைவடைந்துள்ளது.

எனினும் இன்னும் வெப்பநிலை நீங்கவில்லை. மழை வீழ்ச்சி தொடர்ந்தும் அதிகரிக்குமானால், வெப்ப நிலை அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு பின்னர் குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (நி)

# நாட்டின் அபிவிருத்திக்கு

## தமிழர்களின் பங்களிப்பு மிக அவசியம்

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன



(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்கு உள்நாட்டுத் தமிழர்களினதும் புலம்பெயர் தமிழர்களினதும் பங்களிப்பு மிகவும் அவசியம் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கயில்,

"இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள புலம்பெயர் தமிழர்கள் சிலர் முன்வந்துள்ளார்கள். அவர்களை வரவேற்கின்றோம். இந்தச் சிலர் என்ற எண்ணிக்கை பல்லாயிரக்கணக்காக மாற வேண்டும் என்பதே எமது விருப்பம்.

உள்நாட்டில் வாழும் தமிழர்களும் நாட்டின் அபிவிருத்திக்குக் கூடுதலான பங்களிப்பை வழங்க வேண்டும். அப்போது தான் வீழ்ந்த எமது நாட்டை விரைவில் மீளக்கட்டியெழுப்ப முடியும்.

நாட்டின் அபிவிருத்திக்குத் தமிழர்கள் பங்களிப்பு வழங்குவது போல் அவர்கள் எதிர்பார்க்கும் அரசியல் பிரச்சினைக்கும் விரைந்து தீர்வு வழங்குவது அரசின் கடமை." எனப் பிரதமர் தெரிவித்தார். (நி)

# உயர்தர மாணவர்களுக்காக களமிறங்கும் மருத்துவர்கள்

(கொழும்பு)

தொடர்ந்து தாமதமாகும் உயர்தர மாணவர்களின் விடைத்தாள்களை மருத்துவர்களால் மதிப்பீடு செய்ய முடியும் என அரச வைத்திய அதிகாரிகள் மன்றம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் கோரிக்கை விடுத்தால் அதனை நிறைவேற்ற முடியும் என சங்கத்தின் தலைவர் ருக்ஷான் பெல்லான தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பணியிலிருந்து நீக்கப்பட வேண்டும் எனவும், அதற்குப் பதிலாக அரசாங்கம் வேறு தகுதியானவர்களை வேலைக்கு அமர்த்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல்கலைக்கழக கல்வியாளர்கள் அரசாங்கத்தை கவிழ்க்க ஒப்பந்தம் எடுக்கும் குழுவே அன்றி நாட்டைப்பற்றிய உணர்வுகளைக் கொண்ட குழு அல்ல என்றும் தெரிவித்துள்ளார். (நி)

# 2022 ஐ விட மோசமான நெருக்கடி 2026 இல் ஏற்படும்-கம்மன்பில எச்சரிக்கை

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டை விட மோசமான நெருக்கடி 2026ல் ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எச்சரித்துள்ளார்.

உள்ளூர் பொருளாதாரத்தை பலப்படுத்த இந்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் 2026 ஆம் ஆண்டில் கடன் பாரதூரமான விளைவை அனைவரும் அறிந்துகொள்வார்கள் என தெரிவித்தார்.

மேலும் விவாதத்திற்கு தேவையான முழுமையான ஆவணங்களை பாராளுமன்றத்தில் முன்வைக்காமல் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை பற்றி விவாதம் இடம்பெறுவதாக குற்றம்சாட்டியுள்ளார்.

கடனை செலுத்த 7 பில்லியன் டொலர்கள் தேவைப்படுகின்ற போதும் இந்த ஒப்பந்தத்தில் அதிக கடனை தவிர டொலர் நெருக்கடிக்கு தீர்வு கிடையாது என குற்றம் சாட்டியுள்ளார். (நி)

# அச்சம் இல்லையேல் தேர்தலை நடத்துங்கள்

### ரணிலுக்கு அநுர சவால்

(கொழும்பு)

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரின் சகாக்களும் தேர்தலுக்கு அஞ்சவில்லையெனில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடனடியாக நடத்திக் காட்ட வேண்டும்." இவ்வாறு சவால் விடுத்தார் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க.

அவர் மேலும் கூறுகையில், "துணிவில்லாத இந்த அரசால் நாடு எப்படி மீண்டெழுப் போகின்றது?

வாக்குரிமை மக்களின் ஜனநாயக உரிமை. அதை எவராலும் தடுக்க முடியாது. சாக்குப்போக்குக் காரணங்களைச் சொல்லி ஜனாதிபதியும் தேர்தல்கள் ஆணைக்குழுவினரும் சேர்ந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்துள்ளனர். இதற்கு எதிராக அனைவரும் ஓரணியில் நின்று போராட வேண்டும்.

மக்கள் ஆணையை இழந்த இந்த அரசு, ஆட்சியில் தொடர்வது 'வெட்கக்கேடு'. எனவே, முதலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)

# ரணிலின் கரங்களை பலப்படுத்துங்கள் தமிழர்களிடம் அமைச்சர் வேண்டுகோள்

(கொழும்பு)

"தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்தினால் தீர்வை விரைவில் வென்றெடுக்க முடியும்.

அதைவிடுத்து இனவாத நோக்குடன் அரசு மீது விமர்சனங்களை முன்வைப்பது பயனற்றது" என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆட்சியில் இனவாதத்துக்கும், மதவாதத்துக்கும் ஒரு போதும் இடமில்லை. தமிழர்களை அரவணைத்தே இந்த அரசு பயணிக்கின்றது.


இந்நிலையில், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் சிலர் இனவாத நோக்குடன் எம்முடன் முட்டிமோதுகின்றனர்.

அரசை அவர்கள் இனவாதக் கண்ணோட்டத்துடன் நோக்குவதை உடன் நிறுத்த வேண்டும்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் பிரச்சினைக்கும் தீர்வு காணும் நடவடிக்கையில் நாம் அனைவரும் இறங்க வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் டென்னிஸ் சங்கம் நடத்தும் தரப்படுத்தல் சுற்றுப் போட்டி



அகில இலங்கை டென்னிஸ் சங்கத்தின் அனுசரணையில் யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரி நடத்தும் தேசிய ரீதி யிலான தரப்படுத்தல் சுற்றுப் போட்டி இன்று முதல் 3 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கிடையே 14 வயதிற்கும், 18 வயதிற்கும் கீழ்ப்பட்ட ஆண்/பெண் தனிநபர் பங்குபற்றும் தேசிய தரப்படுத்தல் மட்டத்திலான ரெனிஸ் போட்டி முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் இன்று முதல் மூன்று நாட்களுக்கு புனித பத்திரிசியார் கல்லூரி, பரியோவான் கல்லூரி ரெனிஸ் திடல்களில் நடைபெறவுள்ளது.

கொழும்பு, குருநாகல், மட்டக்களப்பு, கிளிநொச்சி போன்ற பல மாவட்டங்களிலுமிருந்து வருகை தரும் மாணவர்களுடன் யாழ்ப்பாணத்தில் பல பாடசாலை மாணவர்கள் சேர்ந்து விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு சென்று போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமல் ஏக்கத்துடன் இருந்த வடமாகாண பல ரெனிஸ் வீரர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் யாழ்.மாவட்டத்தில் ரெனிஸ் விளையாட்டு மேலும் வளர்ச்சியடைவதற்கு பக்கபலமாக இருக்கும். 175 ஆவது ஆண்டை நோக்கி நகரும் புனித பத்திரிசியார் கல்லூரியின் ரெனிஸ் வரலாற்றில் இது ஒரு படிக்கல் எனவும் விளையாட்டு ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (4-6-90)

# பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உள்ளக விளையாட்டுப் போட்டி

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் பிரதேச செயலக ரீதியாக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான உள்ளக விளையாட்டுப் போட்டிகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், கரம், சதுரங்கம் போன்ற போட்டிகளே நடைபெறவுள்ளது. குறித்த போட்டி தொடர்பாக யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் விஜிதரன் குறிப்பிடுகையில், முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

போட்டியில் பங்கு பற்ற விரும்பும் வீர, வீராங்கனைகள் யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவில் நிரந்தர வதிவிடதாரிகளாக இருத்தல் வேண்டும். தொழில் நிமிர்த்தம், கல்வி நிமிர்த்தம் தற்காலிக வதிவிடங்களை கொண்டவர்கள் இப்போட்டிகளில் பங்கு பற்ற முடியாது.

யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலக பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழக அங்கத்தவர்களாக இருப்பதுடன். பிரதேச விளையாட்டு உத்தியோகத்தரின் சிபார்சு பெற்று விண்ணப்பங்களை உறுதிப்படுத்தி கொள்ளல் வேண்டும். இரட்டையர் ஆட்டங்கள் மற்றும். கலப்பு இரட்டையர் ஆட்டங்களில் பங்கு கொள்ளும் இணையாட்டக்காரர்கள் ஒரே பிரதேச செயலக பிரிவினை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. (இப் போட்டிக்கான யாராவது ஒரு போட்டியாளர் தனது விண்ணப்பப்படிவத்தில் மட்டும் இணையாட்டகாரர்களின் பெயரை சேர்த்துக்கொள்ளப்பட்டால்போதுமானது.) விண்ணப்ப முடிவுத் திகதி 10.05. 2023 ஆகும். போட்டிகளுக்கான விண்ணப்பக் கட்டணம் செலுத்தாத போட்டியாளர்கள் அணி ஒழுங்கு தேர்வில் (Draw) சேர்த்துக் கொள்ள படமாட்டார்கள். ஒரு போட்டியாளர் எத்தனை வகையான போட்டி நிகழ்வுகளிலும் கலந்து கொள்ள முடியும்.

ஆட்சேபனைகள் மற்றும் முறைப்பாடுகள் இருப்பின் போட்டிகளுக்கு முன்பாக வாய் மொழி மூலமாகவும் போட்டி முடிவடைந்து 30 நிமிடங்களிற்குள் எழுத்து மூலமாகவும் ரூபா 1000/= முறைப்பாட்டு கட்டணத்தினை செலுத்தி முறையீடு செய்யலாம். தங்கள் முறையீடு வெற்றியளித்தால் இக்கட்டணம் மீள செலுத்தப்படும். மத்தியஸ்தர் தீர்வு இறுதியானது. போட்டி ஒழுங்கமைப்பு குழுவின் நிபந்தனைகள் விதி முறைகளிற்கு அமைவாக போட்டி நிகழ்வு நடைபெறும். விண்ணப்பப் படிவங்களை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தருடன் நேரடியாக சமர்பிக்க முடியும். மேலதிக விபரங்களுக்கு பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் அல்லது மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரினை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4-6-90)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2442

**கருணிகா**




**லிந்துசா**




**தயாபரன்**




**மகிஷினி**




**வைசாலி**




**தருண்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள் அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் தீர்மானத்திற்கு எதிர்ப்பினை வெளியிட்டது அரசாங்கம்

(கொழும்பு)

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவினை கறுப்புப் பட்டியலில் சேர்த்த அமெரிக்காவின் நடவடிக்கைக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி நேற்று வியாழக்கிழமை அமெரிக்க தூதுவர் ஜுலி சங்கிடம் இந்த முடிவு தொடர்பான கடுமையான கவலைகளை தெரிவித்துள்ளார்.

உரிய நடைமுறையைப் பின்பற்றாமல் அமெரிக்காவின் இத்தகைய ஒருதலைப்பட்ச நடவடிக்கையானது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதில் இலங்கை எடுத்துள்ள முழுமையான அணுகுமுறைக்கு எதிரானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் ஜனநாயக ஆட்சி மற்றும் நல்லிணக்கக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள உறுதியான முன்னேற்றத்தின் பின்னணியில் இந்த அறிவிப்பு வெளிவருவது துரதிர்ஷ்ட வசமானது.

இந்த சவால்கள் இருந்த போதிலும், நல்லிணக்கம், பொருளாதார மீட்சி மற்றும் சமூக பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை அடைவதற்கான அதன் தொடர்ச்சியான முயற்சிகளை இலங்கை அரசாங்கம் தொடரும் எனவும் அலிசப்ரி குறிப்பிட்டுள்ளார். (நி)



# பஸ்-கெப் வண்டி நேருக்கு நேர் மோதி கோர விபத்து - ஒருவர் உயிரிழப்பு



(புத்தளம்)

புத்தளம் கற்பிட்டி பகுதியில் பஸ்ஸுடன் கெப் வண்டி நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கற்பிட்டியிலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பஸ்ஸுடன் பாலாவியிலிருந்து கற்பிட்டி சென்ற கெப் வண்டி நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து பாலாவி - கற்பிட்டி சம்மட்டிவாடி பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது கெப் வண்டியில் பயணித்த இருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து கெப் வண்டியின் சாரதி புத்தளம் ஆதார வைத்தியசாலையிலிருந்து சிலாபம் வைத்தியசாலைக்கு சென்ற வேளை சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார். (நி)

# மேலும் ஒரு இந்திய இருமல் மருந்தில் நச்சு அபாயம் உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(வோஷிங்டன்)

மார்ஷல் தீவுகள் மற்றும் மைக்ரோனேசியாவில் அசுத்தமான இந்திய தயாரிப்பு இருமல் மருந்துகளின் தொகுதி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

பஞ்சாபை தளமாகக் கொண்ட மருந்து உற்பத்தி நிறுவனத் தின் Guaifenesin TG சிரப் மருந்தின் மாதிரிகளை பரிசோதித்த பொழுது ஏற்றுக்கொள்ள முடியாத அளவு டைதி லீன் கிளைகோல் மற்றும் எத் திலீன் கிளைகோல் காணப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த இரு கலவைகளும் மனிதர்களுக்கு நச்சுத்தன்மையை ஏற்படுத்தும் என்பதுடன் உயிராபத்துக்களையும் விளைவிக்கும். அத்துடன் இந்த மருந்தினால் யாரேனும் சுகவீன முற்றார்களா என்பது பற்றி அந்த அமைப்பு எந்த விபரத்தையும் வெளியிடவில்லை.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வேறு சில இருமல் மருந்துகளால் காம்பியா மற்றும் உஸ்பகிஸ்தானில் உயிரிழப்பு சம்பவங்கள் நிகழ்ந்தது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்து சில மாதங்களிலேயே இந்த புதிய அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. வளர்ந்துவரும் நாடுகளின் மருந்துத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் உலகின் மிகப்பெரிய பொது மருந்து உற்பத்தி நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கின்றது.

எனினும் பல இந்திய மருந்து உற்பத்தி நிறுவனங்களின் தரம் பற்றி அண்மைக்காலத்தில் விமர்சனங்கள் அதிகமாகவே வலம் வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# வளர்ப்பு நாய்கள் தொடர்பான மாநகர சபையின் அறிவித்தல்

1. மாநகரசபை எல்லைக்குள் நாய் வளர்ப்பாளர்கள் தங்கள் வளர்ப்பு நாய்களை வீட்டு வளவினுள் கட்டி வளர்த்தல் வேண்டும்.
2. வளர்ப்பு நாய்களை வருடந்தோறும் மாநகர சபையில் பதிவு செய்து பெற்றுக் கொண்ட உரிமத் தகட்டினை கழுத்துப்பட்டியுடன் இணைத்து வளர்ப்பு நாய்கள் அணிந்திருப்பதனை அவற்றின் உரிமையாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
3. வருடந்தோறும் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி (A.R.V) தடுப்பூசி ஏற்றுவதுடன் அதற்குரிய பதிவட்டையினையும் பேணுதல் வேண்டும்.
**குறிப்பு :-** வருடந்தோறும் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரிவுகளில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவினரால் நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
4. வீதி விபத்துக்களை ஏற்படுத்தும் விதமாக அல்லது பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்கும் விதமாக வளர்ப்பு நாய்களை வீதியில் நடமாடவிடுவதை தவிர்த்தல் வேண்டும்.

**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-6441)

# மதுபான விற்பனை நிலையங்கள் மூன்று தினங்களுக்கு பூட்டு;

(கொழும்பு)

அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடுவதற்கான அறிவிப்பொன்றை மதுவரித் திணைக்களம் விடுத்துள்ளது. அதன்படி, எதிர்வரும் மே 4, 5 மற் றும் 6 ஆம் திகதிகளில் மதுபான விற் பனை நிலையங்களை மூடுமாறு அந்த திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு வெசாக் பண்டிகையை முன்னிட்டு, இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# இராசிபலன்

**28.04.2023**
**சித்திரை 15, வெள்ளிக்கிழமை**
**அட்டமி பிற்பகல் 4.33 மணிவரை**
**பூசம் முற்பகல் 10.27 மணிவரை**

**சுபநேரம் -5.58-7.28 மணிவரை**
**இராகுகாலம்-10.28-11.58 மணிவரை**
**அட்டமி-நவமி**

**சந்திராஷ்டமம்- மூலம், பூராடம்.**

**வளவன்**


மேஷம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.


கடகம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.


துலாம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், உற்சாகமான நாள்.


மகரம்

குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

வழிபாட்டில் ஆர்வம் கூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


சிம்மம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், தொழிலில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


விருச்சிகம்

பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கும்பம்

தேக நலனில் இருந்த குழப்பங்கள் அகலும், கௌரவமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சிலர் தொழில் ரீதியாக உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.


மிதுனம்

வாக்கு மேன்மையுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர் நண்பர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சிந்தனை மேலோங்கும் நாள்.


கன்னி

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


தனுசு

விட்டுக்கொடுத்துச் செல்வதால் நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, மனக்குழப்பங்கள் தீர வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள்.


மீனம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர் நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மௌனமாக இருக்கத் தெரியாதவனுக்கு நன்றாக பேசவும் தெரியாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபிவிருத்தி லொத்தர் சபை மூலம் உருவான வெற்றியாளர்களுக்கு பணப்பரிசுகளை வழங்கும் மற்றும் அவ் வெற்றிக்களுக்குரிய லொத்தர்களை விற்பனை செய்த விற்பனை முகவர்களுக்குரிய காசோலைகளை வழங்கும் நிகழ்வு, கடந்த 11 ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபை கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் குணரத்ன நாரகல, பொது முகாமையாளர் அநுரஜயரத்ன, பிரபல திரைப்பட நடிகை திருமதி. ருவந்தி மங்களா பெரேரா மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் அதிகாரிகள் பங்கேற்றனர்.

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தின் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் குட்பட்ட பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை சத்திர சிகிச்சையினை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான நோயாளர்களைத் தெரிவு செய்யும் முதலாவது கண் பரிசோதனை முகாம் நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் குட்பட்ட நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ் மாவட்ட சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (4-7-9)

# ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 118 ஆவது ஜெயந்தி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும்.

அன்றைய தினம் பூஜைகளும் ஆராதனைகளும் சொற்பொழிவுகளும் இடம்பெற்று சந்நிதியான் ஆச்சிரம மத்தில் மகேஸ்வர பூஜையும் நடைபெறும். (6)



உலகப் புத்தக நாளை நினைவுகூரும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றன. (படம்-சிவசாந்தன்)

# சுகாதார சீர்கேட்டுடன் நெல்லியடி நகர் மலசலகூடம்

(கரணவாய்)

நெல்லியடி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள மலசலகூடம் பயன்படுத்த முடியாதவாறு சுகாதார சீர்கேட்டுடன் இயங்குவதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதனால் அப்பகுதிகளில் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே சுகாதார தரப்பு இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. (4-6-60)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய முன்றலில் சு.விஜயகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)

# தந்தை செல்வா நினைவுத்தூபி தெல்லிப்பளையில் திரை நீக்கம்



(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 46ஆவது நினைவு நாளில் அவரது நினைவுத் தூபியொன்று யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில்திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

தெல்லிப்பழையில் அமைந்துள்ள சேமக்காலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை குறித்த நினைவுத் தூபி தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழு தலைவரும் தென்னிந்திய திருச்சபையின் ஓய்வுநிலை பேராயருமான சு.ஜெபநேசனால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

கலைஞர் தவ.தஜேந்திரனால் நினைவுத் தூபி வடிமைக்கப்பட்டதுடன் இருபாலையிலுள்ள சஹானா சிற்பாலயம் சிற்ப வடிவமைப்பை மேற்கோண்டது.

இந்நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வே.பத்மதயாளன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கிறிஸ்தவ மதகுருமார்கள் , தந்தை செல்வா அறக்கட்டளை அங்கத்தவர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-6-33)

# நயினாதீவில் புதிய மின் பிறப்பாக்கி, குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு பிரதேசத்தில் பழுதடைந்திருந்த மின்பிறப் பாக்கிக்கு பதிலாக சுமார் 300 மெகாவாட்ஸ் உற்பத்தி திறனுள்ள மின்பிறப்பாக்கி ஒன்று புதிதாக பொருத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இலங்கை மின்சார சபையினால் இந்த மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் நயினாதீவிற்கு 24 மணித்தியால மின்சார விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் RO திட்டத்தினை சீராக செயற்படுத்தி நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு ஆகியவற்றுக்கான குடிநீர் விநியோகத்தினை தொடர்ச்சியாக வழங்குவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா:46<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: பிரதேச செயலாளர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோக முள்ள பெண்<br>தொ.இ: B/13604 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 19 1/4 சூரியன் செவ்வாய் 12 இல்<br>உயரம்:155 CM<br>தகைமை/தொழில்:-A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ:G/13642 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 33 சூரியன் செவ் 9 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>எதிர்பார்ப்பு:தொழில் புரிபவர்<br>தொ.இ: B/13615 | பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா: 17 1/4<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், இஞ்சினியர், கணக்காளர்<br>தொ.இ:G/13629 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம் 29 1/2<br>கி.பா:7 இல் செவ் , சூரி<br>தகைமை/தொழில்: Bsc Civil engineering ஒப்பந்தகாரர்.<br>தொ.இ: B/13630 | பிறப்பு:1995(RC)<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:A/L, Beautician<br>தொ.இ:G/13623 |
| பிறப்பு:1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 28 3/4<br>தகைமை/தொழில்: க.பொ.த.சாதாரணதரம் / வியாபாரம்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13624 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:52<br>உயரம்:165 CM<br>தகைமை/தொழில்: BSC.ஆசிரியர்<br>தொ.இ:G/13605 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலயம்
கொக்குவில்

# வருடாந்த பொதுக்கூட்டம் 2023

*14.05.2023 ஞாயிற்றுக்கிழமை பி.ப3.00 மணிக்கு தலைவர் திரு.சு.விஜய குமாரன் அவர்கள் தலைமையில் அமைப்புத் திட்ட விதிக்கு அமைய ஆலய முன்றலில் நடைபெறும்.*

**நிகழ்ச்சி நிரல்**

1. தலைமையுரை
2. செயலாளர் ஆண்டறிக்கை
3. செயலாளரின் வருடாந்தக்கூட்டறிக்கை
4. பொருளாளரின் பரிசோதிக்கப்பட்ட வரவு- செலவு அறிக்கை
5. விசேட தீர்மானங்கள் நிறைவேற்றப்படுதல்
6. புதிய பரிபாலன சபை அங்கத்தவர்களை தெரிவு செய்தல்
7. சபையோர் குறிப்புரை

*வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் கவனத்திற்கு சமர்ப்பிக்க விரும்பும் பிரேரணைகளை வருடாந்தப் பொதுக்கூட்டம் கூடுவதற்க்காக சுற்றறிக்கை வெளியிட்ட திகதியிலிருந்து ஏழு (07) நாட்களுக்குள் செயலாருக்கு எழுத்து மூலம் அனுப்புதல் வேண்டும்*

*குறிப்பு: பொதுச்சபை அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனையோர் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.*

நன்றி

*(15383)* **செயலாளர்**

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 6. ஆனந்தன் வடலி வீதி, 330/1 ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் K.நவரட்ணம் பெண் நாகம்மா என்ற பெயரில் யாழ்.மாநகரசபை ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் கனகசபை நவரத்தினமும் பெண் நாகம்மாவும் 09.04.1962 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கந்தையா தில்லையம்பலம் முகதாவில் 1914 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் முத்தையா சோதிலிங்கம் பெண் நல்லைநாயகி என்பவரிற்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

பின்னர் குறித்த ஆதன்த்தை முத்தையா சோதிலிங்கமும் பெண் நல்லைநாயகியும் 13.10.1972 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கிருஷ்ணபிள்ளை துரசிங்கம் முகதாவில் 21386 ஆம் இலக்கத்தில் .நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செல்லையா லிங்கசாமி பெண் சரஸ்வதி என்பவரிற்கு அறுதியாக விற்றுள்ளனர்.

அதன்பின் குறித்த ஆதனத்தை செல்லையா லிங்கசாமியும் பெண் சரஸ்வதியும் 09.10.1976 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராமலிங்கம் இராசா முகதாவில் 1991 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் முத்தையா சோதிலிங்கம் பெண் நல்லநாயகி என்பவரிற்கு அறுதியாக விற்றுள்ளனர்.

பின்னர் குறித்த ஆதனத்தை முத்தையா சோதிலிங்கம் 29.05.2019 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மு.சே.இராசையா முகதாவில் 9270 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் தனபாலசிங்கம் பெண் கலாஜோதி என்பவரிற்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

அதன்பின் குறித்த ஆதனத்தை பொன்னையா தனபாலசிங்கமும் பெண் கலாஜோதியும் 12.02.2022 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மு.சே.இராசையா முகதாவில் 10170 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஜயரஞ்சன் விஜயரூபன் என்பவரிற்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

எனினும் 10170 ஆம் இலக்க நன்கொடை உறுதியின் ஆதன அட்டவணையில் "யாழ் மாநகரசபை" என்பதற்குப் பதிலாக "நல்லூர் பிரதேசசபை" என தவறுதலாக உள்ளமையால், 15576 ஆம் இலக்க வெளிப்படுத்தலும் உறுதிப்படுத்தலும் உறுதியால் உள்ளூராட்சி சபை: "யாழ் மாநகரசபை" என யாழ்ப்பாணம், அரியாலை, A.V.றோட் எனும் முகவரியைச் சேர்ந்த விஜயரஞ்சன் விஜயரூபன் வெளிப்படுத்தி உறுதிப்படுத்தியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், சுண்டிக்குளிக் கோவிற்பற்று. யாழ்ப்பாணம் மாநகரசபை, நல்லூர் பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு-J/94. சிவியாதொரு இறை: "சிதம்பரன் புலம்" விஸ்தீரணம் நிலப்பரப்பு (1,3/4) ஒன்றே முக்காலும், கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும், இதன் எல்லை:-

கிழக்கு : செல்லையா முத்துச்சாமிக்கும் பெண் சின்னம்மாவுக்குமுரிய ஆதனம்;
வடக்கு : செல்லையா முத்துச்சாமிக்கும் பெண் சின்னம்மாவுக்குமுரிய பிரத்தியேக கையொழுங்கை
மேற்கு :இதன் மீதியாதனமும் மேற்குப் பக்க றோட்டிலிருந்து இவ்வாதனத்துக்கும் இதன் மேற்கெல்லை மீதியாதனத்துக்கும் போக்குவரத்து செய்யவுள்ள கையொழுங்கை முகப்பும்;
தெற்கு : பொன்னையா காசிப்பிள்ளைக்கும் பெண் சின்னம்மாவுக்குமுரிய ஆதனம், இதடங்கலும்.

தற்போது விஜயரஞ்சன் விஜயரூபன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார் எனவே இவ்வாதன்த்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது விஜயரஞ்சன் விஜயரூபன் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(சி-6430)

# பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம்

(கொழும்பு)

ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதாக சபைக்கு அறிவித்தார். (நி)

# 112 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு

## — சுகாதார அமைச்சர் —

(கொழும்பு)

அரசாங்க மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் 112 வகையான மருந்துகளுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், முன்னதாக அரச மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் 1,347 வகையான மருந்துகளில், 150 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கைக்குத் தேவையான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் 50 பில்லியன் ரூபா அதாவ்து 13.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகின்றதாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.(நி)

# அதிக வெப்பம் காரணமாக மேலும் ஒருவர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக அனுராதபுரத்தில் மற்றுமொருவர் உயிரிழந்துள்ளார்.

எப்பாவல, மெடியாவ, யாய 2 பகுதியில் அதிக வெப்பநிலையை தாங்க முடியாமல் 81 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். வெப்ப அதிர்ச்சியினால் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக வெப்பநிலை காரணமாக உயிரிழந்துள்ளதாக சந்தேகிக்கப்படும் நபர்களின் மூன்று இறப்புக்கள் வெவ்வேறு பகுதிகளில் பதிவாகியுள்ளன. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 150 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 250 | 250 |
| தக்காளி | 120 | 140 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 180 | 240 |
| கோவா | 200 | 180 | 180 | 240 |
| கரட் | 120 | 220 | 150 | 250 |
| பூசணி | 60 | 50 | 50 | 40 |
| புடோல் | 100 | 140 | 150 | 180 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 120 |
| பாகற்காய் | 350 | 400 | 250 | 400 |
| வெண்டக்காய் | 150 | 150 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 180 | 100 | 140 | 80 |
| லீக்ஸ் | 250 | 240 | 280 | 240 |
| பீற்றூட் | 240 | 150 | 200 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 400 | 1000 |
| போஞ்சி | 250 | 200 | 300 | 350 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 120 | 80 |
| தேசிக்காய் | 400 | 250 | 380 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 120 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 400 |
| வெங்காயப்பூ | -- | -- | 250 | -- |
| முள்ளங்கி | 60 | 100 | 100 | -- |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 40 |
| ஈரப்பலா | 120 | -- | 150 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 136

### பட்டினத்தாரும் விமர்சனங்களும்



நீங்கள் பட்டினத்தாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்... மிகப் பெரிய செல்வந்தரான அவர்.

ஒருநாள் அத்தனை செல்வத்தையும் துறந்து விட்டு துறவறம் பூண்டு. கோவணத்துடன் கிளம்பினார். கையில் திருவோடு வைத்திருப்பது . கூட உண்மையான துறவுக்கு எதிரானது என்பது அவர் கருத்து.

ஒருமுறை ஒரு வயல் வழியாக நடந்து சென்ற வேளை மிகவும் களைப்படைந்தார். அப்படியே வரப்பில் படுத்து உறங்கினார். வளர்ந்திருந்த நெற்செடிகள் காற்றில் அசைந்து அவரின் சட்டை அணிந்திராத உடம்பில் குத்தி ரணப்படுத்தின... ஆனாலும் அதைப் பற்றி கவலைப்படாதவராக அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்...

அப்போது பெண்கள் சிலர் அந்த வரப்பு வழியாக நடந்து வந்த வேளை பட்டினத்தார் வரப்பின் மீது படுத்திருந்த காரணத்தால் அவர்களால் அவரைத் தாண்டி செல்வது கடினமாக இருந்தது.

அவர்களுக்கு அவர் பட்டினத்தார் என்பது தெரியாது. யாரோ ஒரு சாமியார் என்று நினைத்தனர். அப்போது அதில் ஒரு பெண் "யாரோ ஒரு மகான் உறங்கிக் கொண்டிருக்கிறார் அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது" என்று கூறி வரப்பை விட்டுக் கீழே இறங்கி நடந்தாள்.

இதைக் கேட்ட இன்னொரு பெண்மணி "இவரா பெரிய மகான் ஆசையை அடக்க முடியாமல் தூங்குவதற்குக் கூட வரப்பை தலையணையாகப் பயன்படுத்திக் கொண்டு தூங்குகிறார் பாரு" எனக் கோபமாகவும் பேசினாள்.

இதனைக் கேட்ட பட்டினத்தார் அதிர்ச்சி அடைந்து "அந்தப் பெண்ணுக்கு இருக்கும் புத்தி கூட தனக்கில்லாமல் போய் விட்டதே" என்று வேதனைப்பட்ட அவர்.

அந்தப் பெண்கள் அங்கிருந்து கடந்து போனதும் வரப்பிலிருந்த தலையைக் கீழே வைத்துப்படுத்தார். சற்று நேரத்தில் அந்தப் பெண்கள் திரும்பி வந்தனர். அப்போது அந்த சாமியார் வரப்பிலிருந்து கீழே படுத்திருப்பதைப் பார்த்த அந்தப் பெண்மணி "பார்த்தாயா, நீ சொன்னதைக் கேட்டு வரப்பிலிருந்து தனது தலையைக் கீழே வைத்துப் படுத்துவிட்டார்.

இப்போது சொல் அவர் மிகப் பெரிய மகான் தானே..." என்று அக மகிழ்ந்து கூறினாள் ஒரு பெண்...

"இவரா பெரிய மகான். இந்த வழியாகப் போகிறவர்கள் எல்லாம் தன்னைப் பற்றி என்ன பேசிச் செல்கின்றனர் என்று ஒட்டுக் கேட்டு அதைப் பற்றிக் கவலைப்படுகிறார். இவரைப் பார்த்து பெரிய மகான் என்று சொல்கிறாயே" என்றாள் அந்த இரண்டாவது பெண்மணி.

இதைக் கேட்ட பட்டினத்தார் உண்மையிலேயே அதிர்ந்து போய்...

இனிமேல் யாருடைய விமர்சனத்திற்காகவும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வது கூடாது என்று அப்போது முதல் அவர் திடமாக முடிவெடுத்தார். விமர்சனத்தில் இரண்டு வகை உண்டு... ஒன்று நேர்மறை விமர்சனம், இன்னொன்று எதிர்மறை விமர்சனம்.

நேர்மறையான எண்ணம் கொண்டவர்களின் விமர்சனம் எப்போதும் திருப்தி அளிக்கும் விதமாகவே இருக்கும். அந்த முதல் பெண்மணி கூறியதைப் போலவே அது இருக்கும்.

எதிர்மறை எண்ணம் கொண்டவர்கள் செய்யும் விமர்சனம்... எப்போதும் குற்றம், குறைகளைக் காண்பதாகவே இருக்கும். அதாவது அந்த இரண்டாவது பெண்மணியைப் போல. எனவே இது போன்ற நேர்மறையான விமர்சனங்களை எதிர்பார்க்காது உங்கள் உள்ளத்திற்கு எது நேர்மையானதாகத் தெரிகிறதோ அந்தப் பாதையில் உங்கள் பயணத்தைத் தொடர்ந்து கொண்டே இருங்கள்... விமர்சனங்களைப் புறக்கணித்து விடுங்கள்...

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampuri@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# வட்டக்கச்சியில் பெருமளவு தென்னைகள் காட்டு யானைகளால் அழிப்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் 50 இற்கு மேற்பட்ட தென்னை மரங்கள் காட்டு யானைகளால் அழிக்கப்பட்டுள்ளது. இரணைமடு காட்டுப்பகுதியில் நிற்கும் காட்டு யானைகள் இவ்வாறு வட்டக்கச்சி கட்சன் வீதியில் உள்ள மக்களின் குடியிருப்புக்குள் இரவு நுழைந்து பயன் வழங்கிக்கொண்டிருந்த தென்னை மரங்களை அடியோடு அழித்துள்ளது.

குறித்த பகுதியில் உள்ள மூவரது காணிக்குள் நுழைந்த காட்டு யானைகளே இவ்வாறு அழிவினை ஏற்படுத்தியதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். 1993 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாறு குறித்த காணியில் மூவர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்ததாகவும் கடந்த இரண்டு வருடங்களிற்கு முன்னர் ஒருவர் காயமடைந்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அன்று முதல் இன்றுவரை தாம் தொடர்ந்தும் காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்குள்ளாவதாகவும் அப்பகுதியில் காட்டு யானைகள் உள்நுழையாத வகையில் பாதுகாப்பு வேலிகளை அமைத்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-100)

# மாடுகள் திருடப்பட்டு வெட்டப்படும் சம்பவம் வவுனியாவில் அதிகரிப்பு



(குருமன்காடு)

வவுனியாவில் தொழுவத்தில் இருந்த பசுமாட்டினை திருடி இறைச்சிக்காக வெட்டப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.


குறித்த சம்பவமானது வவுனியா கல்வீரங்குளத்தில் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் மாலை தொழுவத்தில் கட்டப்பட்ட பசு மாட்டினை காணாத நிலையில் மாட்டின் உரிமையாளர் மற்றும் அயலவர்கள் பசு மாட்டினை தேடிய நிலையில் இறைச்சிக்காக வெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

இதனையடுத்து சிதம்பரபுரம் பொலிஸாருக்கு இச்சம்பவம் குறித்த விடயம் தொடர்பாக அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இச்சம்பவம் தொடர்பான விசாரணையினை முன்னெடுத்து வருகின்றனர்:

அண்மைக்காலமாக வவுனியா மாவட்டத்தில் பரவலாக மாடு களவாடப்பட்டு வெட்டப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-250)

# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வளி மாசடைவை கண்காணிக்கும் கருவி



(முல்லைத்தீவு)

வளிமண்டல மாசடைவைக் கண்காணிக்கும் கருவி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

பேராதெனியா பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவினைச் சேர்ந்த டியூக் பல்கலைக் கழகம் என்பவற்றின் தொழிநுட்ப ஒத்துழைப்புடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மாவட்டங்கள் தோறும் வளிமண்டல மாசடைவைக் கண்காணிக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் முல்லைத்தீவின் காற்று மாசடைவை அளவிடும் Bluesky Particulate Air Pollution Censor எனும்சாதனம் நேற்றையதினம் மாவட்ட செயலக வளாகத்தில் பேராதெனியா பல்கலைக்கழக தொழிநுட்ப குழுவினால் பொருத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

இச் சாதனமானது ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் வளிமாசடைவு அளவீட்டினை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கும். (4-6)

# முல்லையில் அதிகரிக்கும் கால்நடை திருட்டுக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மாங்குளம் பகுதியில் தொடர்ச்சியாக கால்நடைகள் திருட்டு இடம்பெற்று வருவதாகவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

தமது வாழ்வாதாரமாக இருக்கின்ற 20 வரையான மாடுகள் இதுவரை களவாடப்பட்டுள்ளதாகவும், தொடர்ச்சியாக மாடுகள்களவாடப்பட்டு இரவு நேரங்களில் மாங்குளத்திலிருந்து கடத்திச் செல்லப்படுவதாகவும் இதுதொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் நடவடிக்கை எடுக்க தவறி வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்
# க.பொ.த (சா/த) ஆண்டிறுதிப் பரீட்சை-2022
# விஞ்ஞானம் -II

## பகுதி B


**பகுதி B இல் மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

05. A. கற்களுடன் கூடிய கடற்கரைக்கு களவிஜயம் மேற்கொண்ட மாணவர் குழுவொன்று அவதானித்த சில அங்கிகள் கீழே தரப்பட்டுள்ளன.

**கடலணிமணி, நீரிஸ், நொருக்கு நட்சத்திர மீன், இருவால்வி, இழுது மீன், நண்டு கடல் அல்கா**

i. மேலே தரப்பட்டுள்ளவற்றுள் ஆத்திரபோடாவுக்குரிய விலங்கொன்று தருக?
ii. ஆரை சமச்சீருடைய விலங்குகள் இரண்டு தருக.
iii. உடல் சமதுண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ள விலங்கு யாது?
iv. மேற்படி அங்கிகள் உள்ளடக்கப்படும் பேரிராச்சியம் எது?
v. ஒரே சூழலில் வாழ்ந்தாலும் அங்கிகளிடையே பல்வகைமை காணப்படுகின்றது. இதன் முக்கியத்துவத்தை சுருக்கமாகத் தருக.

B. மனித சமிபாட்டுத் தொகுதியின் சிறுகுடற் சுவரில் காணப்படும் சடைமுளையின் படம் கீழே காட்டப்பட்டுள்ளது.





i. பகுதி b ஐப் பெயரிடுக.

ii. a,b பகுதிகளால் அகத்துறிஞ்சப்படும் சமிபாட்டு விளைவுகள் ஒன்று வீதம் தருக?


iii. பகுதி b யினால் அகத்துறிஞ்சப்படும் சமிபாட்டு விளைவை குருதியுடன் சேர்க்கும் நிணநீர்க் குழாய் யாது?

iv. புரத உணவின் சமிபாட்டுச் செயன்முறை கீழே கோட்டுப் படத்தில் காட்டப்பட்டுள்ளது.




P,Q இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.

C. i. மனித நரம்புத் தொகுதியின் பொதுவான தொழில் எவ்வாறு அழைக்கப்படும்?





ii. ஜிம்னாஸ்டிக் விளையாட்டின் போது உடல் சமநிலையைப் பேண உதவும் மூளையின் பகுதியின் ஆங்கில எழுத்து யாது?
iii. உணவின் சுவையை அறியும் மூளையின் பகுதியைக் குறிக்கும் ஆங்கில எழுத்தை எழுதுக.
iv. மூளையின் பாதுகாப்புக்கு காணப்படும் அமைப்பொன்று தருக.


D. புணரிகள் தோன்றும் போது அமைப்பொத்த நிறமூர்த்தங்களில் காணப்படும் பரம்பரையலகுகள் சுயாதீனமாக தனிப்படுத்தப்படும் என கிரெகர் மெண்டல் சுட்டிக்காட்டினார். ஆனால் அவ்வாறு நிகழாத சந்தர்ப்பங்களும் உண்டு.

i. ஒரே நிறமூர்த்தத்தின் மீது காண்ப்படும் சுயாதீனமாக தனிமைப்படுத்தப்படாத பரம்பரையலகு எவ்வாறு அழைக்கப்படும்?
ii. குதிரையொன்றின் கலமொன்றில் காண்ப்படும் நிறமூர்த்தங்கள் 66 ஆகும் விந்துக் கலத்தில் காணப்படும் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை யாது?
iii. X நிறமூர்த்தத்தில் காணப்படும் இலிங்கமிணைந்த பின்னிடைவான பரம்பரையலகு காரணமாக சிவப்பு - பச்சை நிறக்குருடு ஏற்படும் சிவப்பு - பச்சை நிறக்குருடுக்கான காவிப்பெண், சுகதேகி ஆண் ஆகியோரில் காணப்படும் இலிங்க நிறமூர்த்த சோடிகளை வெவ்வேறாகத் தருக.
(நிறக்குருடுக்கான ஆட்சியான பரம்பரையலகு C, பின்னிடைவு பரம்பரையலகு C ஆகும்.)

06. A. கலவையொன்றிலுள்ள கூறுகளை வேறாக்க ஆய்வு கூடத்தில் பயன்படுத்தப்படும் உபகரண ஒழுங்கமைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.




படம் A





படம் B

i. P,Q ஆகிய உபகரணங்களைப் பெயரிடுக.
ii. A,B ஆகிய சந்தர்ப்பங்களில் கூறுகள் வேறாக்கும் முறைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
iii. உபகரணம் Pயில் பகுதி b யூடாக நீரை உட்செலுத்தி பகுதி a யூடாக வெளியேற்றப்படுவதால் உள்ள உபயோகம் யாது?
iv. உபகரணம் Q வில் அயடீன் நீர்கரைசல் இட்டு பின்னர் காபன் நாற்குளோரைற்று கரைசல் சேர்த்து நன்கு குலுக்கப்பட்டது.
a. சில நிமிடங்களின் பின்னர் தோன்றும் c,d படைகளைப் பெயரிடுக.
b. நீர், காபன் நாற்குளோரைட்டு என்பன இரு படைகளாக வேறாகி இருக்கக் காரணம் யாது?
c. கூறுகள் வேறாக்குவதற்கு அமைப்பு B பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் ஒன்று தருக.

B. இரும்பு துருப்பிடித்தலில் செல்வாக்குச் செலுத்தும் காரணி ஒன்றைப் பரீட்சிக்க செய்யப்பட்ட உபகரண ஒழுங்கமைப்பை படம் காட்டுகிறது.


i. மேற்படி அமைப்பின் மூலம் இரும்பு துருப்பிடித்தலில் செல்வாக்குச் செலுத்தும் எக்காரணி பரிசோதிக்கப்படுகிறது?
ii. X எனக் குறிக்கப்பட்டுள்ள இரசாயனப் பதார்த்தம் யாது?




iii. சில நாட்களின் பின் ஆணியின் A,B பகுதிகளில் அவதானிக்கத்தக்க மாற்றங்களை வெவ்வேறாகத் தருக.
iv. B(வெளியே உள்ள) ஆணிப் பகுதிகளில் நாகத் தகட்டை இறுக்கமாகத் தொடுகையில் வைக்கும் போது உமது அவதானம் என்ன?
v. மேற்படி அவதானத்துக்கான காரணம் என்ன?
vi. $Fe^{2+}$ அயனை இனங்காண ஆய்வு கூடத்தில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தம் யாது?
vii. கீழே தரப்பட்டுள்ள உலோகங்களின் பிரித்தெடுப்பு முறைகளைத் தருக.
a. Na
b. Au

7. A. திரவ அமுக்கத்தின் இயல்புகளை இனங்காண மாணவர் குழுவொன்று மேற்கொண்ட எளிய செயற்பாடுகள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன.

i. A மற்றும் B படங்கள் மூலம் உறுதிப்படுத்த எதிர்பார்க்கப்படும் திரவ அமுக்கத்தின் இயல்புகளைத் தருக?
ii. அன்றாட வாழ்வில் வளிமண்டல அமுக்கம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக?





iii. மேலே படத்தில் காட்டப்பட்டுள்ள நீர்த்தாங்கியின் திணிவு 100kg அதன் ஒரு கொங்கிறீட் தூணின் தரையுடன் தொடும் தொடுகை மேற் பரப்பு பரப்பளவு $0.25 m^2$ மொத்த நீர்த் தாங்கியால் தரையின் மீது பிரயோகிக்கப்படும் அமுக்கம் யாது?



$(g=10 ms^{-2})$

B. வீட்டு மின்சுற்றின் சுற்று வரிப்படம் கீழே காட்டப்பட்டுள்ளது.





i. துணைக்கூறு A யை இனங்கண்டு எழுதுக.
ii. கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகளை நிகழ்த்தும் வீட்டு மின் சுற்றின் துணைக்கூறுகளுக்குரிய ஆங்கில எழுத்துக்களை எழுதுக.
a. விளக்கு குதை சுற்றுகளுக்கு மின்னை விநியோகித்தல்.
b. நுகரப்படும் மின்சக்தியின் அளவை அளத்தல்.
c. தேவையான போது மின்சுற்றை முற்றாகத் துண்டித்தல்.
b. வீட்டிலுள்ளவர்களை மின் அதிர்ச்சியில் இருந்து பாதுகாத்தல்.

iii. C,D மற்றும் E துணைக்கூறுகளின் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C. ஒளியியல் உபகரணங்கள் மூன்றுக்கு சமாந்தரமாக படும் ஒளிக்கதிர்களின் நடத்தையை உருக்கள் காட்டுகின்றன.




i.முறிவு, தெறிப்பு நிகழும் சந்தர்ப்பங்களை A,B,C என்பவற்றிலிருந்து வெவ்வேறாகத் தருக.

ii. மேற்படி உபகரணங்களில் குழிவாடியைக் குறிக்கும் ஆங்கில எழுத்து யாது?

iii. Aஎனக் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணம் பயன்படும் சந்தர்ப்பம் ஒன்று தருக.

iv. Cயின் குவியத்தூரம் 2cm ஆகும். அதற்கு முன்னால் 3cm தூரத்தில் வைக்கப்படும் பொருளின் விம்பம் தோன்றும் முறையை கதிர் வரிப்படம் மூலம் தருக.

08 A. தாவர இலையில் மாப்பொருள் உண்டு என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்கான செயற்பாட்டின் படிமுறைகள் ஒழுங்கின்றி கீழே தரப்பட்டுள்ளன.


a.மாபொருள் காணப்படுமாயின் நீலம் அல்லது கடும் ஊதா நிறம் தோன்றும்.

b. நன்கு சூரியஒளி படும் இடத்திலுள்ள தாவர இலை ஒன்றைத் தெரிவு செய்தல்.

c.மதுசாரம் கொண்ட கொதிகுழாயில் இலையை இட்டு கொதி நீர்த் தொட்டியில் வைத்தல்.

d.இலையை நீரில் அவித்தல்.

e.இலையை நீரில் கழுவி சில துளி அயடீன் கரைசல் சேர்த்தல்.




i. இச் செயற்பட்டை ஒழுங்குபடுத்தி ஆங்கில எழுத்துக்களை எழுதுக.


ii. ஒளித் தொகுப்பில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு காரணியைப் பரிசோதித்துப் பார்க்க அமைத்த உபகரண ஒழுங்கமைப்பை படம் காட்டுகிறது.

அ.கரைசல் X ஐப் பெயரிடுக.

ஆ. மேற்படி செயற்பாட்டின் மூலம் ஒளித்தொகுப்பில் செல்வாக்குச் செலுத்தும் எக்காரணி பரிசோதிக்கப்படுகிறது?

இ.பரிசோதனையை செயற்படுத்தும் போது கவனிக்க வேண்டிய காரணிகள் இரண்டு தருக.

08. பொதுமைப்பாடெய்திய ஒரு கலத்தில் உள்ள கலப்புன்னங்கள் சில கீழே தரப்பட்டுள்ள..





i. தாவரக்கலத்தில் மட்டும் உள்ள புன்னங்கள் எது?

ii. A,B ஆகிய புன்னங்களின் தொழிற்பாடுகளை வெவ்வேறாகத் தருக.

iii.இலிப்பிட்டு ஸ்ரீரொய்ட்டுகளை உற்பத்தி செய்து கடத்தும் புன்னங்கள் எது?

iv. A எனும் புன்னங்கத்தைக் கொண்டிராத பாலூட்டி விலங்குகளில் காணப்படும் கல வகை யாது?

C. ஒரு வளையத்தில் மூன்று விற்றராசுகள் மூலம் வழங்கும் முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது.





i.விற்றராசை இழுக்கும் போது அவற்றில் சேமிக்கப்பட்டுள்ள சக்தி யாது?


ii.வளையம் ஓய்வில் இருக்குமெனின் விசைகளின் தாக்கக் கோடுகள் பற்றி யாது கூறுவீர்?

iii. வினா ii இல் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் B,C விற்றராசுகளினால் பிரயோகிக்கப்படும் விசைகளின் விளைவுள் 75 N எனின் விற்றராசு A யின் வாசிப்பு யாது?

iv. 20kg திணிவுடைய ஒரு பலகை நான்கு கயிறுகளால் சுயாதீனமாக கட்டித் தொங்க விடப்பட்டு சமநிலையில் இருப்பதை படம் காட்டுகிறது. ஒரு கயிறு மீது பிரயோகிக்கப்படும் இழுவை விசை யாது? (g-10ms⁻²)





D. அழுத்தப்பட்ட வில்லொன்றின் மீது 50g திணிவுடைய பந்தொன்று வைக்கப்பட்டிருக்கும் முறையை படம் காட்டுகிறது.




i.இரும்புக் கோல் Pயை அகற்றிய போது பந்து மேலே தூக்கி எறியப்பட்டது. இங்கு நிகழும் சக்தி நிலை மாற்றம் யாது?

ii.பந்தின் இயக்கத்துக்கான வேக-நேர வரைபு கீழே தரப்பட்டுள்ளது. வரைபில் இருந்து ஆரம்ப வேகம் U வைக் காண்க.




iii.பந்தின் ஆரம்ப உந்தம் எவ்வளவு?

iv. பந்து செங்குத்தாக கீழ்நோக்கி விழுந்தால் அதன் வேகம் எவ்வளவு?

09. A. $CaCO_3$ ,HCI இடையே நிகழும் தாக்கத்தின் தாக்க வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணியை இனங்காணும் பரிசோதனையின் போது பெறப்பட்ட முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.
(தாக்கத்தின் போது $CaCO_3$ துண்டு, தூள் 6g வீதமும் சமஅளவான HCI கரைசலும் பயன்படுத்தப்பட்டன.

| [illegible] | | 2 | 4 | 6 | 8 | 10 | 12 | 14 |
|---|---|---|---|---|---|---|---|---|
| [illegible] $CaCO_3$ | துண்டு | 1.1 | 3.5 | 4.2 | 4.3 | 4.7 | [illegible] | 4.3 |
| | தூள் | 1.1 | 4.4 | 4.7 | 4.3 | 4.8 | [illegible] | 4.3 |

i.$CaCO_3$தூள், HCl இடையே தாக்கம் தொடங்கி எவ்வளவு நேரத்தின் பின் முடிவடைந்தது?

ii.இங்கு பரிசோதிக்கப்பட்ட தாக்க வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணி யாது?

iii.மேற்படி காரணி தாக்க வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் முறையை சுருக்கமாகத் தருக.


iv.அமிலத்தின் செறிவை அதிகரிக்காமல் $CaCO_3$ தூளின் தாக்கவீதத்தை அதிகரிக்க மேற்கொள்ளக்கூடிய செயற்பாடு யாது?

v.8ஆவது நிமிடத்தில் $CaCO_3$ தூள் அழிவடையும் வீதத்தை அடிப்படையாகக் கொண்டு இத்தாக்கதின் தாக்க வீதத்தைக் காண்க.

B. $CaCO_3$ , HCI இடையேயான தாக்கத்தின் போது முகவை வெப்பமாகி இருப்பது அவதானிக்கப்பட்டது.

i.மேற்படி அவதானத்தில் இருந்து இத்தாக்கம் வெப்பவிளைவு தொடர்பான எவ்வகைத் தாக்கமாகும்?

ii.கீழே தரப்பட்டுள்ள சக்திமட்ட வரைபை பூரணப்படுத்துக. (தாக்கிகளையும் விளைவுகளையும் எழுதிக் காட்டுக.)




C. வெப்பத்தின் செல்வாக்கு தொடர்பாக மாணவர் குழுவொன்று செய்த செயற்பாடு கீழே தரப்பட்டுள்ளது.




i.அமைப்பு a யில் நிறமூட்டப்பட்ட நீர்மட்டம் ஆரம்பத்தில் A வரை இருந்தது. வெப்பம் வழங்கியபோது முதலில் B வரை கீழிறங்கி பின் C வரை உயர்ந்தது. இதற்கான காரணத்தை விளக்குக.


ii.செயற்பாடு b யின் அவதானத்துக்கான காரணம் யாது?

iii. அமைப்பு a யில் பின்வரும் சந்தர்ப்பங்களில் வெப்பம் இடம் மாறும் முறைகளை எழுதுக.

1. பாத்திரம் வெப்பமேறல்-
2.பாத்திரத்திலுள்ள நீர் வெப்பமேறல்

iv. பாத்திரத்திலுள்ள நீரின் திணிவு 200g அதன் வெப்பநிலை 5°C ஆல் உயர்ந்தது எனின், அதற்கு பயன்படுத்தப்பட்ட வெப்பத்தின் அளவு யாது?(நீரின் தன்வெப்பக் கொள்ளளவு 4200JKg⁻¹ ⁻¹)

D. கீழுள்ள சுற்றில் கடத்தியின் மேலால் ஒரு திசைகாட்டி வைக்கப்பட்டுள்ள விதம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.




i.ஆளி S ஐ மூடிய போது உமது அவதானம் என்ன?

ii. கலங்களின் முனைகளை மாற்றி ஓட்டத்தை பாயவிடும் போது உமது அவதானம் என்ன?

iii. மேற்படி அவதானத்தின் மூலம் நீர் பெறும் முடிவு யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

# புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

**உழைப்பையே மூலதனமாக்கிச் செயற்படும் ரிஷப இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், 22.4.2023 முதல் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். 12 ஆம் இடம் என்பது பயணங்களையும் விரயங்களையும் குறிக்கும் இடமாகும். அந்த இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது விரயங்கள் கூடுதலாக இருக்கும். ஆரோக்கியத்திலும் அடிக்கடி அச்சுறுத்தல்களும், மருத்துவச் செலவுகளும் ஏற்படலாம். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டு திக்கு முக்காட வைக்கும். உங்கள் சுய ஜாதகத்தில் குரு இருக்கும் பாதசாரம் அறிந்து அதற்குரிய தல வழிபாடுகளை மேற்கொண்டால் விரய குருவின் ஆதிக்கம் கூட வெற்றி தரும் நேரமாக அமையும். குரு இருக்கும் இடத்தின் பலன்! ஆண்டுக்கு ஒரு முறை பெயர்ச்சியாகி அனைத்து வளங்களையும் தரும் குருபகவான் உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகை கிரகமாவார். எதிரியாக இருந்தாலும் எதிரில் வரும்பொழுது கும்பிட்டால், உதறித் தள்ளாமல்



ஒன்று சேர்ந்து வாழ வழி வகுப்பவர் குருபகவான். அந்த குருபகவான் 8 ஆம் இடத்திற்கு அதிபதியாகி 12 இல் வரும்பொழுது "கெட்டவன் கெட்டில் கிட்டிடும் ராஜயோகம்" என்பதற்கு ஏற்ப வெற்றிக் கனியை எட்டிப்பிடிப்பீர்கள். இடமது பன்னிரெண்டில் இயல்பாக குருவும் வந்தால் கடமையில் கவனம் தேவை! காசுகள் விரயமாகும்! உடமையால் சொத்து சேரும்! உடல் நலம் அச்சுறுத்தும்! தடம் புரளாமல் வாழத் தைரியம் கைகொடுக்கும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் விரய ஸ்தானத்தில் குரு வரும் பொழுது விரயங்கள் அதிகரிக்கலாம். எனவே சுபவிரயங்களாக மாற்றிக் கொள்ளுங்கள். உடல்நலத்தில் சிறுசிறு தொல்லைகள் வந்தாலும் உடனுக்குடன் மருத்துவ ஆலோசனைபெற வேண்டும்.

**குருவின் வக்கிர காலம்!**

(12.9.2023 முதல் 20.12.2023 வரை) இக்காலத்தில் குருபகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக் காலில் வக்கிரம் பெறுகின்றார். அப்பொழுது சில நல்ல காரியங்கள் முடிவடையும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அருளாளர்களின் ஆசியும், அனுபவஸ்தர்களின் ஆலோசனையும் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கும். மாலைக்காக காத்திருக்கும் பிள்ளைக்கு மாலையும், வேலைக்காக காத்திருக்கும் பிள்ளைகளுக்கு வேலையும் கிடைக்கும். உங்கள் இராசி நாதனாகவும், சுக்கிரனுக்கு பகை கிரகமாகவும் விளங்கும் குரு, வக்கிரம் பெறுவதால் இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். உத்தியோகத்தில் உயர்வும், பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகளும் கிடைக்கும்.

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

குருவின் பார்வை பலத்தால் 4, 6, 8 ஆகிய இடங்கள் புனிதமடைந்து அதன் மூலம் நல்ல பலன்கள் இல்லம் தேடி வரப்போகின்றது. குருவின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் தாய்வழி ஆதரவு கிடைக்கும். தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும். உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். கடல் தாண்டிச் சென்று பணிபுரிய வேண்டுமென்று விரும்பியவர்களுக்கு அது கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும். இடம், வீடு வாங்குவது அல்லது விற்பது, பழைய வாகனத்தைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனம் வாங்குவது சம்பந்தமாக நீங்கள் செய்த முயற்சியும் கைகூடும். குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்க வில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது பஞ்சாயத்துக்கள் சாதகமாக அமையும். வாங்கிய தடனை கொடுக்க வழிபிறக்கும். குருவின் பார்வை 8 ஆம் இடத்தில் பதிவதால் ஆயுள் ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே உடல்நலத்தில் இருந்த குறைபாடுகள் ஒவ்வொன்றாக மாறும். பொது வாழ்வில் ஏற்பட்ட வீண்பழிகள் அகலும். இழந்த பதவிகளை மீண்டும் பெறுவீர்கள். தொழிலில் ஏற்பட்ட குறுக்கீடுகள் விலகும்.

வியாபாரத்தில் இதுவரை ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வீர்கள். உத்தியோகத்தில் சிலருக்கு நீண்ட தூரத்திற்கான மாறுதல் கிடைக்கும். நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்! அசுவதி நட்சத்திரக் காலில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது: குருபகவான் விரய ஸ்தானமான 12 ஆம் இடத்தில் ராகு சேர்க்கை பெற்று இருப்பதோடு அசுவதி நட்சத்திரக்காலில் கேது சாரத்தில் சஞ்சரிக்கப் போவதால் மிக மிக கவனத்தோடு செயற்பட வேண்டும். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும். தேக ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகளும் அதன் விளைவாக மனச் சஞ்சலங்களும் கூடும். பணக்கவலை ஒரு புறம், மனக்கவலை மற்றொரு புறம் என்ற நிலை உருவாகும். தொழில் செய்பவர்கள், போட்ட முதலீட்டை எடுத்து விட வேண்டுமென்று பாடுபடுவீர்கள். பரணி நட்சத்திரக் காலில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது, குருபகவான் பரணி நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது நன்மையும், தீமையும் கலந்து நடைபெறும். உங்கள் இராசிநாதனாகவும், 6 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் சுக்கிரன் என்பதால் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தடைகள் ஒவ்வொன்றாக விலகும். தெய்வ தரிசனங்கள் செய்வதன் மூலம் நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும். தொழிலில் கிளைத் தொழில் தொடங்கலாமா என்று சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டு வெளியில் வந்து சுய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு கட்டுவது, கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது, ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் கூட கவனம் செலுத்தும் நேரமிது. கார்த்திகை நட்சத்திரக்காலில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது: 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் சூரிய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது, இல்லத்தில் நல்ல' சம்பவங்கள் நடைபெறும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். வியாபாரத்தில் வேலை ஆட்களால் ஏற்பட்ட இடையூறுகள் அகலும். மண், பூமியால் இலாபம் உண்டு. பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் போட்டிகள் அகலும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பும், மழலையின் ஓசை கேட்கும் வாய்ப்பும் ஏற்படும்.

**ராகு-கேது பெயர்ச்சி!**

8.10.2023 அன்று மீன இராசியில் ராகுவும், கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றார்கள். குருவோடு சேர்ந்திருந்த ராகு விலகுவதால் குருபகவான் கூடுதல் பலம் பெறுகின்றார். அவரது பார்வைக்கு பலன் அதிகம் கிடைக்கும். லாப ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கப் போவதால் வருமானம் திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சி கூடும். எண்ணங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும். பஞ்சம கேதுவின் ஆதிக்கத்தால் புனித காரியங்கள் நடைபெறும். தகராறு செய்தவர்கள்




தானாக விலகுவர். உத்தியோகத்தில் உயர்மட்ட அதிகாரிகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக கொஞ்சம் விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் இனிமை தரும் விதம் அமையும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் ஏற்படும். ஆன்மிகப் பயணங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். உங்கள் பெயரிலேயே அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பழைய ஆபரணங்களைக் கொடுத்து விட்டுப் புதிய ஆபரணங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண் களுக்கு இதுவரை தடைப்பட்ட பதவி உயர்வு தானாக வந்து சேரும். மேலதிகாரிகளின் பாராட்டுக்களால் உற்சாக மடைவீர்கள்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

இல்லத்துப் பூஜை அறையில் சிவ குடும்பம் படம் வைத்து விளக்கேற்றி வழிபட்டு வாருங்கள். பிரதோஷ நேரத்தில் நந்தீஸ்வரர் பதிகம் பாடி நந்தியம் பெருமான், சிவன், உமையவளை வழிபட்டால் நல்லது நடக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 164





38 அத்தியாயம்

## நந்தினியின் ஊடல்

பெரிய பழுவேட்டரையர் கடைசியாகத் தமது மாளிகைக்குத் திரும்பிய போது நள்ளிரவு கழிந்து மூன்றாவது ஜாமம் ஆரம்பமாகியிருந்தது. வீதிப் புழுதியை வாரி அடித்துக் கொண்டு சுழன்று சுழன்று அடித்த மேலக் காற்றைக் காட்டிலும் அவருடைய உள்ளத்தில் அடித்த புயல் அதிகப் புழுதியைக் கிளப்பியது.

அருமைச் சகோதரனை அவ்வளவு தூரம் கடிந்து கொள்ள வேண்டியிருந்தது பற்றிச் சிறிது பச்சாதாபப்பட்டார். அவர் மீது தம்பி வைத்திருந்த அபிமானத்துக்கு அளவேயில்லை. அந்த அபிமானத்தின் காரணமாகத்தான் ஏதோ சொல்லி விட்டான். இருந்தாலும் சந்தேகக்காரன், எதற்காக அநாவசியமாய் நந்தினியைப் பற்றிக் குறைகூற வேண்டும்? மனித சுபாவம் அப்படித்தான் போலும்.

தான் செய்த தவறுக்குப் பிறர் பேரில் குற்றம் சொல்லித் தப்பித்துக் கொள்ள முயல்வது சாதாரண மக்களின் இயற்கை. ஆனால் இவன் எதற்காக அந்த இழிவான முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்? கைவசம் சிக்கியிருந்த அந்த மோசக்காரத் திருட்டு வாலிபனை விட்டு விட்டு, அதற்காக ஒரு பெண்ணின் பேரில், அதுவும் மதனியின் பேரில் குற்றம் சொல்லுவது இவனுடைய வீரத்துக்கும் ஆண்மைக்கும் அழகாகுமா? போனால் போகட்டும்! அதற்காகத்தான் அவன் வருந்தி மன்னிப்பும் கேட்டுக் கொண்டு விட்டானே? மேலும் அதைப் பற்றி நாம் எதற்காக நினைக்க வேண்டும்?

இருந்தாலும், அவன் கூறியதில் அணுவளவேனும் உண்மை இருக்கக் கூடுமா? ஒருவேளை இந்த முதிய பிராயத்தில் நமக்குப் பெண் பித்து தான் பிடித்திருக்குமோ? எங்கேயோ காட்டிலிருந்து பிடித்து வந்த ஒரு பெண்ணுக்காக, கூடப்பிறந்த சகோதரனை, நூறு போர்க்களங்களில், நமக்குப் பக்கபலமாயிருந்து போரிட்டவனை, பலமுறை தன் உயிரைப் பொருட்படுத்தாமல் நமக்கு வந்த அபாயத்தைத் தடுத்துக் காத்தவனையல்லவா கடிந்து கொள்ள வேண்டியிருந்தது? அப்படி என்ன அவள் உயர்த்தி? அவளுடைய பூர்வோத்திரம் நமக்குத் தெரியாது.

அவளுடைய நடவடிக்கையும் பேச்சும் சில சமயம் சந்தேகத்துக்கு இடமாகத்தான் இருக்கின்றன. சீச்சீ! தம்பி யின் வார்த்தை நம் உள்ளத் திலும் இத்தகைய குழப்பத்தை உண்டாக்கிவிட்டதே! என்ன அநியாயம்? அவள் எப்படி நம்மிடம் உயிர்க்குயிரான அன்பு வைத்திருக்கிறாள்? எவ்வளவு மட்டுமரியாதை யுடன் நடந்து கொள்ளுகிறாள்? நம்முடைய காரியங்களில் எல்லாம் எவ்வளவு உற்சாகம் காட்டுகிறாள்? சில சமயம் நமக்கு யோசனைகள் கூடச் சொல்லி உதவு கிறாளே? இந்த அறுபது வயதுக்கு மேலான கிழவனைத் துணிந்து மணந்து கொண்டாளே, அதைப் பார்க்க வேண்டாமா? தேவலோக மாதரும் பார்த்துப் பொறாமைப்படும்படியான அந்தச் சுந்தரிக்குச் சுயம்வரம் வைத்தால், சொர்க்கத்திலிருந்து தேவேந்திரன் கூட ஓடி வருவானே? இந்த உலகத்து மணி முடி வேந்தர் யார்தான் அவளை மணந்து கொள்ள ஆசைப்படமாட்டார்கள்? ஆ! இந்தச் சுந்தரச் சோழன் கண்ணில் அவள் அகப்பட்டிருந்தால் போதுமே? அப்படிப்பட்டவளைப் பற்றி எந்த விதத்திலும் ஐயப்படுவது எவ்வளவு மடமை? இளம் பெண்ணை மணந்து கொண்ட கிழவர்கள், இல்லாத சந்தேகங்கள் எல்லாம் தோன்றி தம் வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்வார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மூட்டையை வைத்தால்



ஓர் ஊரில் துணி வெளுக்கும் தொழிலைச் செய்து வந்தாள் ஒருத்தி. அவளுக்கு மூன்று மகள்கள் இருந்தனர். மூவருமே அழகிகளாக விளங்கினார்கள்.

எவ்வளவு உழைத்தும் அவர்களால் வயிறார உண்ண முடியவில்லை. வறுமையில் வாடினார்கள். ஒரு நாள், அவர்கள் வீட்டிற்கு அழகான இளைஞன் ஒருவன் வந்தான்.

அம்மா! நான் பக்கத்து ஊரைச் சேர்ந்தவன். செல்வனாக இருக்கிறேன். என் வீட்டு வேலைகளைச் செய்ய ஒரு பெண் தேவை. உங்கள் மகள்களில் ஒருத்தியை அனுப்பி வையுங்கள். நான் அவளை அரசி போல வைத்துக் கொள்கிறேன், என்று இனிமையாகப் பேசினான்.

இதைக் கேட்ட மூத்த மகள், அம்மா! இங்கு நாம் வறுமையில் வாடுகிறோம், நான் இவருடன் செல்கிறேன், என்றாள்.

அவர் சொல்கின்ற வேலைகளைச் செய்து நல்ல பெயர் வாங்கு, என்று அவளை அனுப்பி வைத்தாள் தாய்.

அவளை அழைத்துக் கொண்டு நடந்தான் இளைஞன். நீண்ட தூரம் சென்ற பிறகு அவர்கள் ஒரு மாளிகையை அடைந்தார்கள்.

இதுதான்என் மாளிகை. இங்கு நீ உன் விருப்பம் போல இருக்கலாம் எந்த அறையை வேண்டுமானாலும் திறந்து பார்க்கலாம். ஆனால் அந்தக் கடைசி அறையை மட்டும் நீ திறந்து பார்க்கக் கூடாது. என் கட்டளையை நீ மீறினால் நான் பொல்லாதவனாகி விடுவேன். எல்லா அறைகளின் சாவியும் இங்கே உள்ளது, என்றான் அவன்.

நான் ஏன் உங்கள் கட்டளையை மீறப் போகிறேன். அந்த அறையைத் திறந்து பார்க்க மாட்டேன், என்றாள் அவள்.

தோட்டத்தில் இருந்த ஒரு சிவப்பு ரோசாப் பூவைப் பறித்து வந்தான் அவன். அதை அவள் தலையில் சூடினான்.

நான் வெளியே செல்கிறேன், எப்பொழுது வருவேன் என்று எனக்குத் தெரியாது. அந்த அறையை மட்டும் திறக்காதே, என்று சொல்லி விட்டுச் சென்றான்.

ஒவ்வொரு அறையாகப் பார்த்துக் கொண்டே வந்தாள் அவள். ஒவ்வொரு அறையிலும் விலை உயர்ந்த பொருள்கள் இருந்தன. ஒரு அறையில் நவரத்தினங்களும் பொற்காசுகளும் கொட்டிக் கிடந்தன.

எவ்வளவு நல்ல வாழ்க்கை கிடைத்து இருக்கிறது? நாம் இங்கேயே மகிழ்ச்சியாக இருக்கலாம், என்று நினைத்தாள் அவள்.

பூட்டி இருந்த கடைசி அறை அவள் கண்ணில் பட்டது. அவளால் ஆர்வத்தை அடக்க முடியவில்லை.

அந்த அறைக்குள் அப்படி என்னதான் இருக்கும்? ஏன் நம்மைப் பார்க்க வேண்டாம் என்று தடுக்கிறார்? மெல்லத் திறந்து பார்த்துவிட்டு உடனே மூடி விடுவோம். கண்டிப்பாக அவருக்குத் தெரிய வாய்ப்பு இல்லை என்று நினைத்தாள் அவள்.

சாவியைப் போட்டு மெதுவாக அந்தக் கதவைத் திறந்தாள். உள்ளிருந்து அழுகுரலும் ஓலமும் கேட்டன. உள்ளே நுழைந்தாள்.

அங்கே கொடிய தீயில் பல உயிர்கள் வெந்து கொண்டிருந்தன. காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! என்று அவை கெஞ்சின. தன்னை அழைத்து வந்திருப்பது பிசாசு என்ற உண்மை அவளுக்குப் புரிந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தலைவன் தான் தலைவன் என்பதை வார்த்தைகளால் அல்ல செயலால் உணர்த்துபவனாக இருக்க வேண்டும். – *விவேகானந்தர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கச்சதீவில் இருந்து புத்தரை அகற்றிய கெட்டித்தனம்

**கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயம் ஈழத்துக்கும் தமிழகத்துக்குமான ஓர் உறவுப் பாலம்.**

**கச்சதீவு அந்தோனியார் பெருநாளில் ஈழத் தமிழ் உறவுகள் மட்டுமன்றி, தமிழகத்துச் சகோதரர்களும் அப்பெருநாளில் கலந்து கொள்வதற்காக அங்கு வருகை தருவர்.**

**இதை இன்னும் விளக்கமாகக் கூறுவதாயின், பல ஆண்டுகளுக்கு முன்னர் கச்சதீவு அந்தோனியார் தேவாலயத்தின் பெருநாளின் போது உடன்படிக்கை இல்லாத இரு தரப்பு வர்த்தக நடவடிக்கைகளும் நடந்தாகும்.**

**ஆம், ஒரு காலத்தில் நம்மவர்கள் கச்சதீவுக்குச் செல்லும்போது சவர்க்காரம், தேங்காய் எண்ணெய் போன்ற பொருட்களை தங்களுடன் எடுத்துச் செல்ல, தமிழகத்து உறவுகள் அங்கிருந்து சாறிகள் மற்றும் ஆடைத் துணிகளைக் கொண்டு வருவர்.**

**இவ்வாறு கொண்டு வருபவர்கள் தமக்கிடையே பண்டமாற்று வர்த்தகத்தைச் செய்து கொள்வர்.**

**இதன் காரணமாக, கச்சதீவுப் பெருநாள் ஆரம்பித்துவிட்டால், கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் உலங்கு வானூர்திகளின் அவதானிப்புகள், பொலிஸாரின் உசார் நிலைகள் என ஒரே கலகலப்பாக இருப்பதை அவதானிக்க முடியும்.**

**இது ஒரு சிறு குறிப்புரை மட்டுமே.**

**நாம் கூறவந்தது கச்சதீவில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் பற்றியதாகும்.**

**ஆம், கச்சதீவில் புத்தர் சிலை வைக்கப்பட்டபோது அதற்கு யாழ்ப்பாண ஆயர் இல்லம் தனது எதிர்ப்பை – கவலையை வெளியிட்டது.**

**கச்சதீவில் தங்கியிருக்கின்ற கடற்படையினரின் வழிபாட்டுக்காக புத்தர் சிலை வைக்கப்பட்டதாக கடற்படைத் தலைமை அறிவித்தது.**

**ஆனால் கச்சதீவில் இருந்து புத்தர் சிலையை அகற்றுவதை யாழ்.ஆயர் இல்லம் கன கச்சிதமாக கையாண்டது.**

**ஆர்ப்பாட்டம் இல்லை. ஊர்வலம் இல்லை. எதிர்ப்புக்கூட்டமில்லை. ஆனாலும் கச்சதீவில் வைத்த புத்தர் சிலையை அகற்றிவிட்டோம் என்று கடற்படை யாழ்.ஆயர் அவர்களுக்கு அறிவித்துள்ளது.**

**இங்குதான் கத்தோலிக்க மதத்தின் வலிமை அதன் செல்வாக்கு அரச தரப்புடன் அவர்கள் பேணுகின்ற உறவு என்ற ஏகப்பட்ட விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியுள்ளது.**

**உண்மை. வெறுமனே யாழ்.அரச அதிபருக்கு ஒரு கடிதத்தை எழுதிய ஆயர் இல்லம் எத்துணை நுட்பமாக உயர்மட்டத்தைக் கையாண்டது என்பதை இனியாவது சைவசமயத்தவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.**

**இலங்கை பௌத்த நாடு என்று சொல்லுகின்ற இந்த மண்ணில்; வைத்த புத்தரை சலசலப்பின்றி அகற்றிவித்த பெருமை யாழ். ஆயர் இல்லத்தையே சாரும்.**

**அட, இதை நாம் கூறும்போது இலங்கை அரசாங்கம் இஸ்லாமியர்கள் மீது கை வைத்தால் மத்திய கிழக்கு நாடுகள் எரிபொருளை தரமாட்டோம் என்று அதட்டும்.**

**கத்தோலிக்க மதத்தைச் சீண்டினால், வல்லரசுகள் வாட்டி எடுக்கும்.**

**ஆனால் சைவ சமயத்தை தாக்கினால், தமிழக முதல்வர் ஸ்டாலின் இலங்கைக்கு அன்பளிப்பாக அரிசி வழங்குவார்.**

**சிங்கள அரசியல்வாதிகள் சைவாலயத்துக்கு வந்தால் காளாஞ்சி வழங்க நம் சிவாச்சாரியர்கள் முண்டியடிப்பர்.**

**இதுவே நிலைமை எனில், சிவலிங்கம் உடைபடுவதைத் தவிர, வேறு என்னதான் நடக்கும்.**

# ஆயுள்வேத வைத்தியர் கழுத்தறுத்து கொலை

(கொழும்பு)

ஆயுள்வேத வைத்தியரான இரு பிள்ளைகளின் தாய் கழுத்தறுக்கப்பட்டு கொல்லப்பட்ட நிலையில் வீடொன்றின் பின்னால் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

களுத்துறை வடக்கு பகுதியில் வசிக்கும் விக்கிரமாரச்சிகே பிரேமாவதி என்ற பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை (27) காலை வீடு ஒன்றின் பின்புறம், கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் காணப்படுவதாக தகவல் கிடைத்ததனையடுத்து பொலிஸார் அங்கு சென்று குறித்த வைத்தியரின் சடலத்தை மீட்டுள்ளனர். (ம-7,9)

# ஐ.எம்.எப் விவாதத்தில் கலந்து கொள்ளமாட்டேன்
## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட விஸ்தரிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பில் பாராளுமன்றத்தில் இன்று இடம்பெறவுள்ள வாக்கெடுப்பில் கலந்து கொள்ளப் போவதில்லையென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய காரணத்தினால் கொழும்பிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டமையே இதற்கான காரணம் என அறிக்கை மூலம் அவர் அறிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நிலைமைக்கு மத்தியில், சர்வதேச நாணய நிதியத் திடமிருந்து கடனை பெற்றுக்கொள்வது தவறான விடயமல்லவெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விதிக்கப்பட்டுள்ள பாதகமான நிபந்தனைகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடியதன் பின்னர், அவற்றை எளிமையாக்க வேண்டும் அல்லது நீக்க வேண்டும். கடந்த 40 ஆண்டுகளாக உள்நாட்டு நிதியில் மாத்திரமன்றி வெளிநாடுகளிடம் இருந்து பெற்றுக்கொண்ட நிதியிலும் பாரிய ஊழல் மோசடிகளே இடம்பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தகைய ஊழல் மோசடிகளுடன் சில அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தொடர்புபட்டுள்ளனர். நிகழ்காலத்தில் பெற்றுக்கொள்ளப்படும் வெளிநாட்டுக் கடனை, ஊழல் மோசடிகளுக்காக அன்றி வெளிப்படைத்தன்மையுடன் நாட்டின் சாதாரண மக்களின் வறுமை நிலையை போக்குவதற்காக முதலீடு செய்வது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7,9)

# இலங்கையில் மேலும் கொரோனா கட்டுப்பாடு

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் கோவிட் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வரவுள்ளன.

கோவிட் தொற்றுக்குள்ளான 7 பேர் நேற்று முன்தினமும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது இலங்கையில் கோவிட் நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை குறைவாக இருந்த ஒரு காலத்திற்குப் பிறகு மீண்டும் ஏற்பட்டுள்ளமையினால் அதிக அவதானம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன் காரணமாக சுகாதார ஆலோசனை [illegible] என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன ஆலோசனை வழங்கியுள்ளார்.

பலர் கோவிட் நோய் தொற்று பற்றி மறந்துவிட்டதால், பயணத்தின் போது முகக்கவசம் அணிவது, சவர்க்காரம் பயன்படுத்தி கைகளை தவறாமல் கழுவுதல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற சுகாதார பழக்கங்களை அவர்கள் மறந்துவிட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறு குழந்தைகளை நெரிசலான இடங்களுக்கு அழைத்துச் செல்வதைத் தவிர்க்குமாறு பெற்றோர் [illegible] (ம-7,9)

# இந்திய சுற்றுலாப் பயணி நுவரெலியாவில் மரணம்

(கொழும்பு)

இந்திய பிரஜை ஒருவர் நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்றபோது திடீரென மரணமடைந்துள்ளார்.

68 வயதுடைய குறித்த இந்திய பிரஜை கடந்த 25 ஆம் திகதி நுவரெலியாவில் உள்ள சுற்றுலா தளங்களை பார்வையிடுவதற்காக சென்றபோது திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும், வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்கு முன்பே அவர் மாரடைப்பு காரணமாக மரணித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா சுற்றுலா பொலிஸ் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சுற்றுலாப் பயணி தனது மனைவியுடன் கடந்த 23 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

# வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்களுக்கு நிவாரணம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரிந்து நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு விமான நிலையத்தில் வழங்கப்படும் தீர்வு வரி நிவாரணத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரண அதிகரிப்பானது மே மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது. இத்தகவலை அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இதனை கூறினார்.

தற்போது விமான நிலையத்தில் வழங்கப்படும் சலுகைகளுக்கு மேலதிகமாக வெளிநாட்டு ஊழியர்களுக்கு மேலதிக விசேட சலுகைகளை வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்த நிலையில் அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7,9)

# வீதியில் கண்டெடுக்கப்பட்ட ரூ. ஒரு இலட்சம் பணத்தை
## உரியவர்களிடம் ஒப்படைத்த சிறுமி

ஒரு இலட்சம ரூபாய் பணத்துடன் வீதியில் விழுந்து கிடந்த பையை கண்டெடுத்த சிறுமி அதனை உரிமையாளரிடம் ஒப்படைத்த சம்பவம் அநுராதபுரம் மாவட்டத்தின் ராஜாங்கனையில் இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம் - சிறிமாபுர மகா வித்தியாலயத்தில் தரம் 8 இல் கல்வி கற்கும் குறித்த சிறுமி, அருகிலுள்ள தனது நண்பியின் வீட்டில் விளையாடிவிட்டு தனது வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது வீதியோராமாக கிடந்த கைபை ஒன்றை கண்டெடுத்துள்ளார்.

வெற்று கைபை என நினைத்து எடுத்த அந்த சிறுமிக்கு, அந்த பணப்பை சற்று கடினமாக இருந்ததால் அதை திறந்து பார்த்தபோது, அதில் நிறைய பணத்தாள்கள் கிடப்பதை அறிந்துகொண்டாள்.

பிறருக்கு உரித்தான பொருட்களை நாம் வைத்திருப்பது தவறு என்பதை சிறு வயதிலிருந்தே பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கூறுவதை கடைப்பிடித்து வந்த சிறுமி, குறித்த கை பையை உரிமையாளருக்கு ஒப்படைப்பதற்கு உதவுமாறு தனது நண்பியின் தாயாருக்கு கூறியுள்ளார்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர், அப்பகுதி பிரதேச சபை அதிகாரிகள் முன்னிலையில் கைபை உரிமையாளரான பெண்ணிடம் கையளிக்கப்பட்டது.

அவசர பணத்தேவைக்காக பணத்தை கைபையில் வைத்திருந்தபோதே தனது கைபை தவறவிடப்பட்டதாக அப்பெண் தெரிவித்திருந்தார். சிறுமியின் நற்செயலை பாராட்டி, அப்பகுதியிலுள்ள நலன்புரிச் சங்கமொன்று குறித்த சிறுமியை கௌரவித்திருந்தது. (ம,7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்)

11

இந்த நோக்கங்களுக்காக இலங்கை அரசிடமிருந்து பயண ஆவணங்களோ, நுழைவு அனுமதிகளோ இவர்கள் பெறவேண்டியதில்லை. இதற்கு அவசியமும் இல்லை. இலங்கை இதற்கு நிபந்தனைப்படுத்தவும் முடியாது என்பதாகும்.

6 ஆவது சரத்தானது இந்தியாவினதும் மற்றும் இலங்கையினதும் படகுகள் மற்றவரின் நீர்ப்பரப்பினுள் ஒவ்வொருவர் நீர்ப்பரப்புப் பகுதியிலும் பாரம்பரியமாக அனுபவித்து வந்த உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பர் என்பதாகும்.

1976 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஆதாம் பாலத்திலிருந்து மன்னார் வளைகுடா வரையான பகுதிக்கும் பாக்கு நீரிணையிலிருந்து வங்காள விரிகுடாப் பகுதிக்கும் உரியதாகும். இவ் ஒப்பந்தத்தின் சரத்து 5 பின்வருமாறு கூறுகிறது.

(4) மேற்கூறியவாறு உறுதி செய்யப்பட்ட எல்லைக்கோட்டில், அந்தந்த நாடுகளின் பக்கம் உள்ள வரலாற்று நீர்ப்பரப்பு , ஆளுகைக்குட்பட்ட கடல் தீவுகளின்பரப்பு ஆகியவற்றை அந்தந்த நாடுகள், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும், இறையாண்மை செலுத்தவும் உரிமை கொண்டவை.

(5) மேற்கூறியவாறு உறுதி செய்யப்பட்ட எல்லைக்கோட்டில், அந்தந்த நாடுகளின் பக்கம் உள்ள கண்டப்பரப்பு , பிரத்தியேக பொருளாதார மண்டலம் ஆகியவற்றின் மீதும் அவற்றின் வளங்கள், அவை உயிருள்ளவையாக இருந்தாலும் அல்லது உயிரற்றவையாக இருந்தாலும் மீதும் அந்தந்த நாடுகள், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும், இறையாண்மை செலுத்தவும் உரிமை கொண்டவை.

(6) ஒருநாட்டின்பக்கம் உள்ள கண்டப்பரப்பு , பிரத்தியேக பொருளாதார மண்டலம் ஆகியவற்றின் ஊடாக பயணம் செய்யும் போது அந்நாட்டின் சட்டங்கள், ஒழுங்கு முறைகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் விதிகள் ஆகியவற்றை அனுசரித்து பயணம் செய்தல் வேண்டும்.

அதன் பிரகாரம் இலங்கையின் கருத்து என்ன வெனில், இந்தச் சட்டத்தின் மூலம், இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இருநாடுகளின்கப்பல்களின் கடற்பரப்பு உரிமைகள் மட்டுமே பாதுகாக்கப்பட்டுள்ளன, மீன்பிடி உரிமைகள் அல்ல. அதாவது ஒரு நாட்டின் கடல் எல்லைப் பகுதிக்குள் மற்ற நாட்டின் அனுமதியின்றி எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது என இவ்வொப்பந்தம் கூறுகின்றது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் கூற்றுப்படி "இருதரப்பினரின் உரிமைகளை இறுதி செய்வதற்கு வழிவகுக்கும் ஆயத்தக் குறிப்புகள், 5 வது பிரிவின் கீழ்யாத்ரீகர்களின் உரிமைகள் தேவாலயத்தின்வருடாந்த விழாவிற்கு செல்வதற்கும் கலந்து கொள்வதற்கும் மட்டும் உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது. மேலும் மீனவர்கள் வலைகளை உலர்த்துவதற்கும் மீன்பிடிப்பதற்கும்தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, சரத்து 5 மற்றும் 6 இல் உள்ள விதிகள், இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களுக்கோ அல்லது கப்பல்களுக்கோ எந்தவிதமான மீன்பிடி உரிமையையும் வழங்கவில்லை." இது 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் சம்பந்தமாக நடந்த கடிதப் பரிமாற்றத்துடன் இணைந்தது என்றும் இந்திய அரசாங்கத்தின் அப்போதைய வெளியுறவுச் செயலாளராக இருந்த கேவல்சிங்கிற்கும், அப்போதைய இலங்கையின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளராக இருந்த டபிள்யூ.டி. ஜெய்சிங்க அவர்களிடையே இம் மீன்பிடி உரிமை பற்றிய கேள்வி சந்தேகத்திற்கு இடமின்றி தீர்க்கப்பட்டது என்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு கூறியது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு மேலும் கூறியதில் "கடிதப்பரிமாற்றத்தின் பந்தி 1 இல், மற்ற நாடுகளின் கடற்பரப்பில் இரு மாநில மீனவர்களுக்கும் மீன்பிடிக்கும் உரிமையை மிகத் தெளிவாக நிராகரிப்பட்டுள்ளது. இலங்கையின் வெளிப்படையானஅனுமதியின்றி இலங்கையின் வரலாற்று கடல்கள், பிராந்திய கடல் மற்றும் பிரத்தியேக பொருளாதார மண்டலம் ஆகியவற்றில் இந்திய மீன்பிடிகப்பல்கள் மற்றும் மீனவர்கள் மீன்பிடித்தலில் ஈடுபடக்கூடாது.

அல்லது இந்தியாவின் வெளிப் படையான அனுமதியின்றி வரலாற்றுகடல், பிராந்திய கடல் மற்றும் இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலம் ஆகியவற்றில் இலங்கையின் மீன்பிடிகப்பல்கள் மற்றும் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடக்கூடாது.

எனவே, 1976 ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு, கடிதங்கள்பரிமாற்றத்துடன், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலானகடல் எல்லை தீர்க்கப்பட்டது, மேலும் பரிமாற்றக் கடிதங்கள் ஒரு நாட்டு மீன்பிடிக் கப்பல்கள் மற்றும் மீனவர்கள் மற்ற நாட்டுக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதைத் தெளிவாகத் தடைசெய்கிறது. என்று இலங்கை வெளியுறவு அமைச்சகம் முடிவு செய்துள்ளது எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

### 1990க்கு பின் கச்ச தீவு சம்பந்தமாக இந்தியாவின் போக்கு

1976 ஒப்பந்தத்தில் ஒரு நாட்டின் கடல் எல்லைப் பகுதிக்குள் மற்ற நாட்டின் அனுமதியின்றி எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது என்றவாறாக இருந்த போதிலும் இரு பகுதி மீனவர்களும் இருநாட்டுப் பகுதிக் கடற்பரப்பிலும் சென்று தமது தொழில் முயற்சிகளை மேற்கொண்டே வந்தனர். இரு நாட்டு அரசுகளும் இதைக் கண்டும் காணாதது போலவே இருந்து வந்தன.

துரதிஸ்ட்ட வசமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் நிலவிய அரசியல் நெருக்கடிகள் காரணமாக ஸ்ரீலங்கா அரசு பாதுகாப்புக் கருதி வடபகுதி கடற்பகுதியினை தடைசெய்யப்பட்ட வலயமாக பிரகடணம் செய்தது. முதன் முதலில் கரையிலிருந்து 5 மைல்களுக்கு அப்பால் இலங்கை, இந்திய எல்லைக்குட்பட்ட பகுதியினையும் (தலை மன்னாரிலிருந்து சுண்டிக்குளம் வரை) 1990ன் பின்னர் வடபகுதி முழுவதையும் இவ்வாறு தடைசெய்யப்பட்ட வலயமாகப் பிரகடனம் செய்தது. இதன் விளைவாக இலங்கையின் வடபகுதி மீனவர்கள் முற்றாக மீன்பிடி செய்யத் தடைசெய்யப்பட்டனர்.

ஆயினும் இந்திய மீனவர்கள் இலங்கையின் தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் தடையையும் மீறி மீன்பிடித்தலில் ஈடுபடலாயினர். இதன் காரணமாக இலங்கையின் கடற்படையினரின் கடும் தாக்குதல்களுக்குள்ளாயினர். இதன் காரணமாக கச்ச தீவை மீளப்பெற வேண்டும் என்ற தமிழ்நாட்டின் நிலைபாடு தீவிரம் அடைந்தது. இதனால் இந்தியாவும் புதிய நிலைப்பாட்டை முன்னெடுக்க வேண்டியதாயிற்று.

1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி கச்க தீவு பகுதியில் பாரம்பரியமாக அனுபவித்து வந்த உரிமைகளைத் தொடர்ந்தும் அனுபவிக்க இந்தியா இலங்கை அரசினை வற்புறுத்தி வருகின்றது.

### கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டதா?

1974 இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய கடலோர எல்லைகள் ஒப்பந்தத்தின் மூலம் அது வரை காலமும சர்ச்சைக்குரியதாகக் காணப்பட்ட கச்சதீவுப் பகுதி இலங்கையின் எல்லைக்குள் வந்தது. இதனை எதிர்த்து த்மிழ் நாட்டிலும், அகில இந்திய ரீதியிலும் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. இருப்பினும் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட சில சரத்துகள் தமிழ் நாட்டு மீனவர்கள் பாரம்பரியமாக கச்சதீவுப் பகுதியில் அனுபவித்த உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்க உதவியமையாலும் 2009 க்கு முன்னரான காலப்பகுதியில் வடபகுதி கடலில் எல்.ரி.ரி.ஈ யின் நடமாட்டம் அதிகம் இருந்ததாலும் தமிழ் நாட்டில் கச்சதீவு தொடர்பான விவகாரம் தணியலாயிற்று. 2009 க்குப் பின் கச்சதீவு விவகாரம் மீண்டும் தலைதூக்கியுள்ளது.


பண்டாரநாயக்கா குடும்பம் காலம் தொட்டே நேரு குடும்பத்துடன் நட்புறவு கொண்டிருந்தார்கள். அதே நட்புடன் இந்திராவும் இருந்ததால் சிறிமாவோ பண்டாரநாயக்கா கச்சதீவை இலங்கைக்கு பெற விரும்பினார்.

அக்காலக்கட்டத்தில் இந்திரா தலைமையிலான அரசுக்கும்.ஒரு நெருக்கடி உருவானது. அது என்ன வெனில், மே-18,1974 இல் இந்திராவின் திட்டப்பட்டி ராஜஸ்தான் பாலைவனத்தில் போக்ரானில் முதல் அணுகுண்டு வெடிப்பு சோதனை இந்தியாவால் நிகழ்த்தப்பட்டிருந்து. இதனால் உலக நாடுகள் எல்லாம் இந்தியாவின் மீது கோபம் கொண்டிருந்தன, மேலும் ஐ.நா சபையில் இந்தியா மீது பொருளாதார தடை விதிக்க ஒரு தீர்மானம் கொண்டு வரும் திட்டமும் இருந்தது. எனவே ஐ.நா சபையில் தனக்கான ஆதரவை திரட்ட அண்டை நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ள இந்திரா காந்தி அவர்கள் ஆர்வமாக இருந்த சூழலில், சிறிமாவோ கச்ச தீவைக் கேட்டதால் இந்தியா விட்டுக் கொடுத்து இலங்கையை வளைத்து விடலாம் எனத் திட்டமிட்டது.

பல நாடுகள் இருக்கும் போது இலங்கையால் என்ன பெரிதாக ஐ.நா வில் உதவிட முடியும் என நினைக்கலாம். ஆனால் அந்த காலக்கட்டத்தில் ஐ.நா வின் பாதுகாப்பு அவையின் தற்காலிக உறுப்புநாடுகளின் தலைமை பொறுப்பினை இலங்கையே வகித்து வந்தது.

ஐ.நா பாதுகாப்பு அவையில் ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்பினர்கள்,அது அல்லாமல் 15 உறுப்பினர்களை தற்காலிகமாக தேர்ந்தெடுப்பார்கள், பின்னர் அவர்களில் ஒரு நாட்டினை அகரவரிசைப் படி ஒவ்வொரு மாதமும் பாதுகாப்பு அவையின் தலைவராக சுழற்சி முறையில் தேர்வு செய்வார்கள், எனவே அக்காலத்தில் இலங்கைக்கு பாதுகாப்பு அவையின் தலைவராக வரும் சூழல் உருவானது.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத...

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் மேலும் ஆராய வேண்டியது அவசியமானது என மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இந்த சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் 30 வருடங்களுக்கும் மேலாக நீடித்த, பயங்கரமான உள்நாட்டுப் போரின் அழிவுகளின் கீழ் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு சமூகங்களுக்கு மாத்திரமல்ல என்றும் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

70 மற்றும் 80களில் தெற்கில் ஏற்பட்ட கிளர்ச்சியால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும் இந்த செயல்முறை அவசியம்.

சமாதானம் மற்றும் நல்லிணக்க செயல்முறையை சமமாக எதிர்கொள்ளும் ஒரு தேசிய உரையாடலை நிறுவுவது, உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துடன் ஒப்பிடக்கூடிய ஒரு சட்டமூலத்திற்கான சூழலின் அவசியத்தை சிறப்பாக வரையறுக்கும் என்பதை உறுதியாக கருதுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7,9)

## காங்கேசன்துறை...

பெற்றது.

இந்த நிகழ்வினை முன்னிட்டு அப்பகுதியில் பெருமளவான இராணுவம் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள இந்த விகாரையே யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள மிக உயரமான விகாரை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,9,33)

## கடற்படையின்...

பட்ட காலப்பகுதியில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக தெரிவித்து, வசந்த கரன்னாகொட மற்றும் அவரது மனைவி ஆகியோர் அமெரிக்க குடியரசிற்குள் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற 2008, 2009 காலப் பகுதியில் கொழும்பில் பாடசாலை மாணவர்கள் உட்பட 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தில் வசந்த கரன்னாகொட மீது குற்றம்சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## ஆதிலிங்கேஸ்...

வவுனியா நீதவான் நீதிமன்றத்தில், நீதவான் தேவராசா சுபாஜினி முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன்,

வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளை மேற்கொள்ள ஏற்கெனவே நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) அங்கு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும், விக்கிரகங்கள் இன்றி அங்கு வழிபாடுகள் நடத்தப்பட்டமை தொடர்பிலும், வெடுக்குநாறி மலையிலிருந்த திருவுருவ சிலைகள் மற்றும் பூஜை பொருட்கள் ஆகியன பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இந்த சமர்ப்பணங்களை ஆராய்ந்த வவுனியா நீதவான், வெடுக்குநாறி மலையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட விக்கிரகங்களை அதே இடத்தில் மீண்டும் பிரதிஷ்டை செய்யுமாறும், பூஜை பொருட்களை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையளிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வையுடன் திருவுருவச் சிலைகள் மீள பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பூஜை வழிபாடுகளுக்கு எவ்வித இடையூறுகளையும் விளைவிக்காதிருப்பதற்கும், அங்கு பாதுகாப்பு மேற்பார்வைகளை மாத்திரம் மேற்கொள்வதற்கும் பொலிஸாருக்கு நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்டுள்ளது. அத்துடன், வெடுக்குநாறி மலையிலிருந்த விக்கிரகங்கள் சேதப்படுத்தியமையுடன் தொடர்[illegible] களை கைது [illegible] வதற்கும் பொலிஸாருக்கு கட்டளை

## நீதிமன்ற...

பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 17ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (ம-7,9,250)

## நெடுந்தீவில்...

மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது இருதயம் செயலிழந்ததனால் உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் கடந்த சனிக்கிழமை அதிகாலை ஒரே வீட்டில் வசிக்கும் 6 பேர் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் 3 பெண்களும் 2 ஆண்களும் உயிரிழந்தனர். 100 வயதான மூதாட்டி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த கொலைகளை அரங்கேற்றி நகைகளுடன் தப்பித்தவர் புங்குடுதீவில் வைத்து அன்றிரவே கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,9,33)

## நீதிமன்ற...

ஆலயத்தினர் சார்பில் நீதிமன்றில் மன்றில் முறையீடு செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம் பெற்றது

இதன்போது அவ்வாறு நீதிமன்ற கட்டளைகளை மீறி கட்டுமானப் பணிகள் எதுவும் நடக்கவில்லை என தொல்பொருள் திணைக்களம் மற்றும் அரச சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

இதனை ஆலய தரப்பு சட்டத்தரணிகள் எதிர்த்திருந்த நிலையில் பல மணி நேர வாத விவாதங்களின் பின்னர் நீதிபதி ரி.சரவணராஜா 04.07.2023 அன்று குருந்தூர் மலைக்கு நேரடியாக சென்று நிலைமைகளை பார்வையிட்ட பின்னர் கட்டளை வழங்க வழக்கு விசாரணைகளை ஆடி மாதம் 4 ஆம் திகதிக்கு தவணையிட்டுள்ளார். (ம-7,9)

## மல்லா...

நகைகள் கைப்பற்றப்பட்டன என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பட்டப்பகலில் மல்லாகத்தில் வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்றிருந்தபோது வீடுடைத்து நகைகள் திருடப்பட்டன.

சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரைக் கைது செய்தனர். (ம-7,9,33,104)

## இலங்கை...

சௌத்ரி உள்ளிட்ட நால்வரடங்கிய தூதுக்குழு உத்தியோகபூர்வ விஜயமாக எதிர்வரும் மே முதலாம் திகதி இலங்கை வரவுள்ளது.

இந்திய விமானப் படைத் தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமால் குணரத்ன உள்ளிட்டோரையும் சந்திக்கவுள்ளார். மே மாதம் 6ஆம் திகதி அவர் நாட்டிலிருந்து செல்லவுள்ளதாக விமானப் படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7,9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1554
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 0 7 8 2 0 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.04.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1129
F 26 35 42 60
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.04.27
சீட்டிழுப்பு இலக்கம் 3341
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Q 03 17 21 66
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1447
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்
Y 04 11 45 56 64

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.27
சீட்டிழுப்பு இலக்கம் 408
கும்பம் 07 09 27 32 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/04/27
சீட்டிழுப்பு இலக்கம் 5099
N 2 8 7 0 5 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2073
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.04.27
தினம் வியாழக்கிழமை
Q 22 41 64 70
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 4,494,340/-
DLB

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.27
சீட்டிழுப்பு இல : 4234
வர்ணம் : சிவப்பு
ரூ. 5,087,020/-
வெற்றி இலக்கங்கள் 19 29 36 58
ஆங்கில எழுத்து E
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-04-27
வெற்றி வாரம் 3785
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 17 35 43 54
கும்பம்
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 9,745,060/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 12 33 48 72 73
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1249
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2023.04.27 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 325,921,734.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

சம்பர்தன வாசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 589
திகதி 2023-04-27
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 41 42 64
விதி எண் 06
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 19,272,996/-
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1899
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.04.27
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 4,502,540/-
வெற்றி இலக்கங்கள் 04 08 12 19
ஆங்கில எழுத்து F
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15351)

076 825 7716 (ஆகாஸ்)

## வேலையாட்கள் தேவை



சாவகச்சேரி மீசாலையில் இயங்கும் மருந்தகத்திற்கு மருந்து தொடர்பான முன் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் விண்ணப்பிக்கவும். (15388)

077 245 4224, 077 711 0329

## காணி விற்பனைக்கு உண்டு


யாழ். நாவற்குளி A9 வீதியில் இரண்டாம் காணி 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.


- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்பு உள்ள சூழல்
- நன்னீரூற்று
- 1 பரப்பின் விலை 650,000/- மட்டும்

(15392)

076 436 5814
077 065 4525

# சென்னையை வென்றது ராஜஸ்தான்





ஐ.பி.எல். தொடரில் நேற்று ஜெய்ப்பூரில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை 32 ஓட்டங்களால் வீழ்த்தியது.

டாஸ் வென்ற ராஜஸ்தான் பேட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட்டிங் செய்த ராஜஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 202 ரன்கள் குவித்தது.

தொடக்க வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 77 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். துருவ் ஜுரெல் 15 பந்துகளில் 34 ரன்கள் விளாசினார். தேவ்தத் படிக்கல் ஆட்டமிழக்காமல் 27 ரன்கள் எடுத்தார். ஜாஸ் பட்லர் 27 ரன்களில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து 203 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை அணி களமிறங்கியது. ஷிவம் துபே பொறுப்புடன் ஆடி அரை சதமடித்து 52 ரன்னில் ஆட்டமிழந்தார். அதிரடியாக ஆடிய ருதுராஜ் 47 ரன்னில் அவுட்டானார். மொயீன் அலி, ஜடேஜா தலா 23 ரன்கள் எடுத்தனர். இறுதியில், சென்னை அணி 170 ரன்கள் மட்டும் எடுத்து தோற்றது.

இதன்மூலம் 32 ரன்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் 5வது வெற்றியைப் பதிவு செய்தது.

போட்டியில் ஆட்டநாயகனாக யஷஸ்வி ஜெய்ஸ்வால் தெரிவானார்.

(ம-7,9)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6444)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## சுய தொழில்வாய்ப்பு • நிறைந்த வருமானம்

V2 TRAVELS CHOLA FOODS CHOLA INTERNATIONAL (PVT) LTD உடன் இணைந்து

புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்

யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

(C-6444)

V2 TRAVELS 0777-068-777

## குத்தகைக்கு தேவை

வான் / கார் தனியார் கம்பனிக்கு குத்தகைக்குத் தேவை (15384)

077 489 1279

## A/L இரசாயனவியல்

யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் தனிப்பட்ட அல்லது சிறுகுழுக்களாக கற்பிக்கப்படும். (15373)

071 257 9018

## LED Video Wall for Rent

ஆலய நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள், பரிசளிப்பு விழாக்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளை நேரலையாகவும், நிகழ்வு இடம்பெறும் இடத்தில் LED திரையில் (LED Video wall) காட்சிப்படுத்த அழையுங்கள் (15386)

075 111 2222

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE



அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம் (15337)

077 544 8503

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15390)

077 814 7389, 077 986 5457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி ) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை (15389)

076 755 8606, 077 638 5683

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 08 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை


தொடர்புகளுக்கு :- ஜெயம் (15390)

077 814 7389, 077 986 5457

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம்
  காலை 6 முதல் மாலை 6 வரை



முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.

076 911 9371, 076 165 3129

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.